467

467
1-58

உ

சிவமயம்

மாணிக்கவாசகர் அருளிய

★ திருவெம்பாவை
★ திருப்பள்ளி எழுச்சி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 FEB 1958
MADRAS

வெளியிடுவோர் :

ஸ்ரீ சங்கரநாராயணசுவாமி தேவஸ்தானம்

சங்கரநயினார்கோவில்

923:417x5
N57
76918

மாணிக்கவாசகர் அருளிய

திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி

*

சங்கீதவர்ணமெட்டு :

Dr. K. சங்கரநாராயணன், B. A., L. M. S.

T. M. தியாகராஜன்.

*

S. இராமசாமிக் கோனர், B. A., B. L., மானேஜிங் தர்மகர்த்தர்.

S. மாணிக்கவாசகம் பிள்ளை
S. இராமசுவாமி முதலியார்
E. அமராவதி நாடார்
P. ஊர்காவலன், M. L. A.
} தர்மகர்த்தர்கள்.

M. சூரியராஜ், B. A., B. L., நிர்வாக அதிகாரி,

1st Edition December 1957 :

Q23:417x5
N57

76918

Hilal Press, Tirunelveli-12 —'57.



Block by courtesy:

SRI S. R. NARAYANA RAJA

Geethanjali Mills Ltd.,

SANKARANAINARKOIL

முன்னுரை

தென்னாட்டில் ஒப்புயர்வுடன் விளங்கும் பல பெரிய கோவில்களில் சங்கரநயினர் கோவில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. இங்கேதான் நமது இந்து சமயத்தின் உட்பிரிவுகளான சைவம், வைணவம், சாத்தேயம் காணபத்தியம், கௌமாரம், பைரவம் போன்ற யாவும் அன்பே உருவான ஒரே இறைவன் தம் சக்தியை பல உருவங்களில் வெளிப்படுத்தி நம்மை ஆட்கொண்டுள்ளார் என்னும் பேருண்மை நிலைநாட்டப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதாவது ''அரனின் கூறுதான் அரி'' என்று உணர்த்த தம் அருட் சக்தியாகிய 'ஆவுடையம்மை'க்கும் தம்மிடம் வரும் சைவ, வைணவப் பெரு மக்களுக்கும் 'ஆடித் தவசு உற்சவத்தில் ஸ்ரீ சங்கரநாராயணமூர்த்தியாகக் காட்சி தந்தருளுகிறார்'.

இத்தலம் கோவிலின் பெயரையே கொண்டு அமைந்த சங்கரநயினர் கோவில் என்ற நகரின் மத்திய பாகத்தில் அமைந்துள்ளது. இந்நகர் தென்னிந்திய இரயில்வேயில், விருதுநகர் - தென்காசி குறுக்குப் பாதையில் அமைந்துள்ளது. இரயிலடியிலிருந்து கோவில் சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது. இவையன்னியில் இந்நகர் நாற்திசைகளிலும் நல்ல சாலைகளால் திருநெல்வேலி, கோவில்பட்டி. தென்காசி, ஸ்ரீவில்லிப்புத்தூர் முதலிய நகரங்களுடன் இணைக்கப்பட்டு பஸ் வசதியும் நல்ல முறையில் அமைந்துள்ளது. இங்கே தரிசனத்திற்காக வரும் மக்கள் தங்க அநேக பொதுச் சத்திரங்கள் இருக்கின்றன. அவையன்னியில் தேவஸ்தானத்திலிருந்து கோவிலுக்கு வெகு அண்மையில் யாத்திரிகர்கள் விடுதி ஒன்று நல்ல வசதிகளுடன் அமைக்கப்பட்டு குறைந்த வாடகைக்கு விடப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தினமும் மக்கள் திரள்திரளாக தரிசனத்திற்கு வந்து செல்கின்றார்கள்.

தேவஸ்தானத்திலிருந்து ''தலவரலாறு'' ''தலபுராணம்'', Greatness of the Temple என்னும் சிறு ஆங்கில வெளியீடு போன்ற பல பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாண்டு மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவெம்பாவையையும், திருப்பள்ளியெழுச்சியையும், முறையே திரு. ராய. சொக்கலிங்கம், திண்டுக்கல் திரு. P. K. சண்முகநாதன் அவர்களின் பொழிப்புரைகளுடனும் அந்த அருட்பாக்களுக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர் திரு. Dr. K. சங்கரநாராயணன் B. A., L. M. S., அவர்கள் தஞ்சாவூர் சங்கீத வித்வான் திரு. T. M. தியாகராஜன் அவர்கள் உதவியுடன் அமைத்துள்ள சங்கீதவர்ண மெட்டுடன்

தொகுத்து வெளியிடும் வாய்ப்பு அமைந்தது. அவர்கள் யாவர்க்கும் தேவஸ்தானம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இத்தொகுப்பு சிறந்த முறையில் வெளியிடுவதற்கு பெரிதும் உதவியாயிருந்த தர்மகர்த்தக் குழுவினருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

மேலும் எங்களது வேண்டுகோளுக்கிணங்கி இவ்வெளியீட்டிற்கு ஒரு பாராட்டுரை வழங்கிய திரு. P. K. சண்முகநாதன் B. A., B. L., அவர்களுக்கும் அருட்பாவின் ஆசிரியரான மாணிக்க வாசகப்பெருமானின் வாழ்க்கை வரலாற்றை "திருவாசகம்" என்னும் நூலிலிருந்து எடுத்து இதில் வெளியிட அனுமதி தந்த ஆசிரியர் பாகனேரி திரு. லெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்களுக்கும், நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். மற்றும் படங்களும், 'Block'களும் கொடுத்துதவிய அன்பர்களுக்கும் எமது நன்றி.

இங்ஙனம்
M. சூரியராஜ், B. A., B. L.
நிர்வாக அதிகாரி

பாராட்டுரை

திராவிட வேதமாகக் கருதப்படும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும், எட்டாம் திருமுறையான மணிவாசகப் பெருமானின் திருவாசகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. படிப்பவர் மனத்தைப் பரவசப்படுத்த வல்லது. அலைகின்ற மனதுக்கு சாந்தியளிக்கும் ஓர் மருந்து. திருவாசகத்தில் திருவெம்பாவை என்ற பகுதி நடு நாயகமாகவும் சிரோரத்னமாகவும் திகழுகின்றது. சைவ உலகம் இதனை மார்கழித் திங்களில் நாள்தோறும் ஓதி நற்பயனெய்துவர். இதன் உள் பொருளாகவுள்ள கருத்து பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்க இறைவனோடு ஒன்றியிருக்கும் பராசக்தி தன்னிலிருந்து ஒவ்வொரு சக்திகளை பிரேரித்து சிருஷ்டியை நடத்துவதாகக் கூறுவர். மனோன்மணி சக்தி சர்வ பூத தமனியையும், அவர் பலப்ரமதனியையும், அவர் கலவிகர்ணியையும், அவர் காளியையும், அவர் ரௌத்திரியையும், அவர் ஜேஷ்டையையும் அவர் வாமையையும் முறையே ஒருவரை ஒருவர் பிரேரித்து அநந்ததேவராலே அசுத்தமாயை காரியப்பட்டு பிருதிவிமுதல் ஐம்பெரும் பூதங்கள் உண்டாம் என்பது. இது சைவ சித்தாந்தத் தத்துவப்படி பிரபஞ்ச உற்பத்தியாகும் முறையாகும். இவ்வாறு ஒரு சக்தி ஒரு சக்தியை எழுப்புதலே திருவெம்பாவையின் தத்துவப் பொருள். இதனைத் திருப்பெருந்துறைப் புராணத்தில் "மலவிருள் உற்று உறங்காமல் மன்னுபரிபாகர் அருள், செலமுழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை" எனக் கூறப்பட்டுள்ளது.

திருமுறைகள் முதல் ஏழுக்கும் இசையமைக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் திருவாசகத்துக்கு இசையமைப்புச் செய்ததாகத் தெரியவில்லை. பாராயணம் செய்ய இசை அதிகமான பயன்தரக்கூடியது என்பது யாவரும் ஒப்புக்கொள்வர். தற் காலத்தில் தமிழ் ஓதுவாமூர்த்திகள் பலரும் பலதிறப்பட்ட இசைகள் அமைத்துப் பாடி வருகின்றனர். ஏனைய முதலேழு திருமுறைகள் போல திருவாசகத்துக்கும் பண்ணிசைத்து ஒருமுகப் படுத்துவது சாலச் சிறந்தது. அம்முறையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் டாக்டர் K. சங்கரநாராயண அய்யர் திருவெம்பாவைப் பகுதிக்கு பண்ணமைத்து உதவியிருப்பது மிகவும் போற்றத் தக்கது.

டாக்டர் அவர்கள் திருவெம்பாவைப் பாடல்களுக்கு சீரிய முறையில் கர்நாடக ராகங்களை அமைத்திருக்கின்றார். அவரே இப் பாடல்களை பாடிக் கேட்க வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பண்ணுக்காக சொற்களைச் சிதைப்பது நாம் சாதாரணமாய்

பார்க்கும் ஓர் அசம்பாவிதம். அவ்வாறன்றி டாக்டர் அவர்கள் சொற் சிதைவு இன்றி பண்ணோடு பாடும் இயல்பு மிகவும் மகிழ்ச்சிக்குரியது. மேலும் பாவ ராகங்கள் என்று கூறப்படும் முறையையும் கையாண்டு ஒவ்வொரு பாடலின் பொருளுக்கேற்ப ராகங்கள் அமைத்திருப்பது சாலவும் போற்றத் தகுந்தது. சுருங்கச் சொன்னல் இந்த அபூர்வ அமைப்பு இறைவன் அருளாலேயே அவருக்கு உண்டாயிருக்க வேண்டும். அவர் அமைத்துள்ள வர்ணமெட்டோடு திருவெம் பாவைப் பாடல்களைப் பாடக் கேட்பவர்கள் உள்ளம் பரவசமடைந்து தற்போத மிழந்த தன்மையராய் நிற்கக் காணலாம். ஒவ்வொரு பாடலுக்கும் இசையும் பொருந்த அமைத்து அந்தந்த ராகத்தின் மேள வரிசையும் கொடுத்து ஸ்வரப் படுத்தியும் உதவியிருப்பது இசை பயிலும் மாணவர்க்கும், ஏனைய இசை வல்லுனர் களுக்கும் நிரம்பப் பயனளிப்பதாகும். இதுவரை தத்தமக்கு நேர்ந்த ராகங்களில் பாடிவரும் இசைவாணர்கள் டாக்டர் அவர்களின் வர்ணமெட்டுக்களைக் கையாண்டு வந்தால் வேதமாகப் போற்றப்படும் திருவெம்பாவை ஒரே மாதிரியாக யாவரும் பாடியும் பாராயணம் பண்ணியும் வருவதற்கு உதவும்.

இவ்வாறு இறைவனருளால் டாக்டர் அவர்கள் செய்த பேருதவிக்கு சைவ உலகும், இசையுலகும் மிகவும் கடப்பாடுடையனவாகும் என்பது அடியேனின் கருத்து. வாழ்க திருவெம்பாவை, வாழ்க டாக்டர் சங்கர நாராயணன்.

இங்ஙனம்
ராவ்சாகிப்-*P. K.* ஷண்முகநாதன் B. A., B. L.
திண்டுக்கல்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள்

வரலாற்றுச் சுருக்கம்.

இவர் பாண்டிவள நாட்டிலே, வைகையாற்றங் கரையிலுள்ள திருவாதவூர் என்னும் திருப்பதியிலே அமாத்தியர் என்னும் அந்தணர் குடியிலே தோன்றியருளினர். வாதவூரர் என்பது இவர்களுக்குத் தந்தையாரிட்ட பிள்ளைத் திருப்பெயர். பதினாறாண்டு நிறம்புமுன் பார்வாய்க்கலைகள் யாவும் பயின்றுணர்ந்து நல்லொழுக்க நல நிரம்பிய நாயனர், யாவரும் நன்கு வியந்து போற்றப் பிறங்கினர். இவரது கீர்த்திச் சிறப்பைக் கேட்ட அரிமர்த்தன பாண்டியன் இவரை அழைப்பித்து இவர்பால் மிளிரும் கூரிய அறிவினைக்கண்டு குணப்பெருங் குன்றமெனக் கொண்டு பாராட்டி தனக்கு முதல் அமைச்சராக்கினன்.

இங்ஙனம் அமைச்சுத் தொழில் நடாத்துகையில் அடிகளுக்கு உலக வாழ்க்கையின் உவர்ப்புத் தோன்றி உயிர்க் குறுதி யாதெனவும் அதனைப்பெறுமாறு யாதெனவும் உசாவிக் கேட்டனவெல்லாம் நீர்விடாய்க் குண்ட உவர்நீர் போல் வேட்கையை மிகுவிக்க, அதனைத் தணிக்கவல்ல நல்லாசிரியரை எதிர்பார்த்திருந்தனர். அங்ஙனமிருக்கையில் அரசன் அடிகளைக் கீழ் கடற்றுறையிலே சென்று குதிரை வாங்கி வரும்படி ஏவ, அங்ஙனமே அடிகள் அளவிறந்த பொற்குவைகளைக் கைக்கொண்டு செல்லுமாற்றில் திருப்பெருந்துறையை யடைந்தார். அடிகள் அங்கே குருந்த மரத்தடியில் அருளாசிரியராய் எழுந்தருளியிருந்த பெருமானைக் கண்டு காந்தத்தை எதிர்த்த இரும்புபோல் இழுப்புற்றுப் புளகங் கொண்டு பன்முறை வணங்கிப் பாடி யாடி, பெரும! அடியேனை ஆட்கொண்டு உய்விக்க எனக் குறையிரந்து வேண்டி அவர்பால் கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள் உண்மைகளைத் திருவைந்தெழுத்தடைவால் அருளப் பெற்றனர். அவ் வருட்பொருளை ஐயந்திரி பின்றி அங்கையி னெல்லிக் கனியெனப் பெற்ற அடிகள் சிவபெருமானிடத்து அன்பு மீக் கூர்ந்தவராய் ஞானவாணியி னல்லருளால் அருட்பாடல்களைப் பொழிவாராயினர். அவற்றைக் கேட்டருளிய சிவபெருமான்

திருவுளங் களிகூர்ந்து அவரது திருவாயினின்றும் பிறந்த வாசகங்கள் விலேயேறப் பெற்ற மாணிக்கங்கள்போன் றிருந்தனவாதலின் அவருக்கு 'மாணிக்க வாசகர்' என்னும் திருப்பெயரளித்து மறைந்தருளினர்.

பின்பு அடிகள் குதிரை கொணரக் கொண்டுசென்ற பொருளேச் சிவன் கோயிற் றிருப்பணிக்கும் சிவனடியார்களுக்குஞ் செலவிட்டு, சிவ வழிபாட்டில் ஆழ்ந்திருந்தனர். இதனேக் கேள்வியுற்ற பாண்டியன் சினந்து அடிகளேத் திரும்பி வருமாறு சீட்டு ஒன்று விடுப்ப, அடிகள் அதனேப் பெருமாற்கு அறிவித்து முறையிட, அவர் தந்த விலேமதிக்கப் பெருத மாணிக்க மொன்றைப் பெற்றுக் கொண்டு பாண்டியன்பாற் சென்று அதனே ஈந்து மகிழ்வித்து, 'அரச! குதிரைகள் ஆவணித் திங்கள் மூலநாளில் வரும்' என்றனர். அது மெய்யெனக் கொண்டிருந்த அரசன் ஒற்றராற் பொய்யென அறிந்து அவரைச் சிறையிலிருத்தி வருத்த, அவர் வருத்தங் கண்டு பொருத சிவபெருமான் நரிகளேப் பரிகளாக்கிக் கொணர்ந்து அரசன்பா லடைவித்துப் பின் அவற்றை மீளவும் நரிகளாக்க, அவை முன்னுள்ள குதிரைகளுக்கும் ஊறு செய்து சென்றன. அஃதறிந்த அரசன் அடிகளேச் சுடு மணலிற் கல்லேற்றி நிறுத்திப் பின்னும் வருத்துமளவில் அது தெரிந்த பரம்பரன் வைகையாற்றி னீரை ஊழிக்காலத்து வெள்ளமெனப் பெருக்கி மதுரை ஒழியுமோ வென அச்சுறுவிக்க, அஞ்சிய அரசன் ஊரவரை உறுவித்துக் கரை அடைப்பிக்கப் பராபரன் ஒரு பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாய் வந்து மண்சுமந்து அடிபட்டு அடிகள் பெருமையை அரசற்கு நன்கு அறிவுறுத்தி மறைந்தருளினர்.

பின் அடிகள் பாண்டியனேத் தேற்றி மதுரையி னீங்கித் திருப்பெருந் துறையிற் சின்னுளிருந்து சிவபெருமான் ஏவியவாறே திருவுத்தரகோசமங்கை முதலிய பல திருப்பதிகளுக்குச் சென்று திருப்பதிகங்கள் பாடித் தில்லேயை யடைந்து புத்தர்களோடு வாது புரிந்து வென்று, ஊமைப் பெண்ணேப் பேசு வித்து, அங்கு சிவயோக மார்ந்திருந்தனர். அப்போது சிவபெருமான் ஓரந்தண ராகி அடிகளே அடைந்து அடிகள் அப்பதியிலும் மற்றும் பற்பல சிவப்பதிகளிலும் ஓதியருளிய திருப்பாடல்களே யெல்லாஞ் சொல்லத் தொகுத்துத் 'திருவாசகம்' எழுதித் திருக்கோவையார் பாடுவித்து அதனேயும் எழுதிக் கைச்சாத்திட்டுத் திருவம்பலப்படியில் வைத்து மறைந்தருளினர். அதன்பின் தம்மையடைந்து திருமுறையின் பொருள் வினவிய திருமறையாளர் மூவாயிரவர்க்கும் அடிகள் பொற்சபை புகுந்து சிவபெருமானேப் பொருளெனக் காட்டித் திருவருளில் இரண்டறக் கலந்தனர்.

மாணிக்கவாசகர் திருநட்சத்திரம்

சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசி மூலம்
அத்தரைப் பணிசம் பந்த ரானிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சோதிநாளிற் சுந்தரர் கைலை சேர்ந்தார்.

மாணிக்கவாசகர் வயது

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டிற் றெய்வீகம்—இப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

அடிகள் சரிதங் கூறும் புராணங்கள்

1. திருவுத்தரகோசமங்கைப்புராணம்
2. திருவாதவூரர்புராணம்
3. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்
4. பரஞ்சோதிமுனிவரியற்றிய திருவிளையாடற்புராணம்
5. திருப்பெருந்துறைப்புராணம்.

மேற்கண்ட புராணங்கள் ஐந்தனுள்ளும் அடிகள் வரலாற்றிற் சிற்சில வேறுபாடுகள் உள. அடிகள் காலம் சற்றுமுன் பின்னாக ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளாகின்றன வென்பர் பெரியார்.

பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	i
	பாராட்டுரை	iii
	மாணிக்கவாசக சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்	v
1.	திருவெம்பாவை	1
2.	திருப்பள்ளியெழுச்சி	43

திருவெம்பாவை

மணிவாசகர்

திருவெம்பாவை — 1

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை, யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்

மாதே! வளருதியோ? வன்செவியோ? நின்செவிதான்:
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்துஒலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே விம்மி, விம்மி மெய்ம்மறந்து,
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்

ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என்னே! என்னே!
ஈதே எம் தோழி பரிசுஏலோர் எம்பாவாய்!

முதலாவது பாட்டின் பொருள்

உறங்கும் ஒரு பெண்ணின்வீட்டின் முன் நின்று பல பெண்கள் பேசுகின்றனர்:

கத்திபோன்ற, ஒளி பொருந்திய பெரிய கண்ணையுடைய பெண்ணே! முதலும் முடிவும் இல்லாத அருமையும் பெருமையும் கொண்ட ஒளிமயமான இறையை, நாங்கள் பாடுவதைக் கேட்டும் நீ உறங்குகின்றாயா? உன் காது, அவ்வளவு பலமானதா? மகாதேவனுடைய நீண்ட திருவடிகளை நாங்கள் வாழ்த்திய பேரோசையை, வீதியிலே கேட்டவுடனே, விம்மி விம்மித் தன்னை மறந்து, மலர்கள் பரப்பிய படுக்கையினின்றும் புரண்டு வீழ்ந்து, ஒன்றுக்கும் உதவா தவளாக மயங்கிக் கிடந்தாள் ஒரு பெண். இங்ஙனமாக, இவ்வாறு உறங்கும் எம் தோழியாகிய உன் தன்மை என்னே! என்னே! நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்: ஆராய்ந்துபார்: எமது பதுமை போன்றவளே!



நடராஜர்

Block by courtesy
Sri T. M. BHASKARA TONDIMAN, M. A.

(1) ராகம் ஹம்ஸத்வனி   தாளம் ஆதி

	‖ ;, கா ப நீ	ஸா ; ஸா ஸா	;ஸரிஸ நிபா	பாநீ காபா ‖
1.	‖ ஆ தியும்	அந் த மு	மில் லா...	வரும் பெரும் ‖
	‖ ;, நிகரிஸா	ஸ்நிபா நீ ரீ	;, நிரிநி பா	பகநிப கரிஸா ‖
2.	‖ சோ தியை	யாம் பாடக்	கேட் டேயும்	வாட் ட டங்கண் ‖
	‖ ;, கா பா நி	ஸா,ஸ் ஸாஸா	;,ஸாரிக ரி	ஸா, ரி நீ ஸா ‖
3.	‖ மாதேவ	ள ரு தி யோ	வன்செவியோ	நின்செ விதான் ‖
	‖ ;, பகரீஸ்	ஸாநிப நீரீ	; க ரிஸ்நிபா	பகநிப கரிஸா ‖
4.	‖ மா தேவன்	வார், க ழல்கள்	வாழ்.த்தி-ய	வாழ்.த்தொ. வி-போய் ‖
	‖ ;, பா ப பா	பா, ப ஸ்நிபா	;, நீ ரீ நி	,பா பாக பக ‖
5.	‖ வீ திவாய்க்	கேட்ட லு மே	விம்மி விம்	மி மெய் ம றந் ‖
	‖ ரீ, கப கா, ரி	ஸாரி ஸநி பா	;,ஸரி ககா	பா ; ஸ்நிபா ‖
6.	‖ து போ தா ர	ம ளி யின் மே	னின் றும்பு	ரண் டிங் கண் ‖

7, 8 அடிகள் 3, 4 அடிகள் போல் பாடவும்

திருவெம்பாவை — 2

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், இராப்பகல்நாம்
பேசும்போது எப்போது?இப் போதார் அமளிக்கே

நேசமும் வைத்தனையோ? நேர்இழையாய்! நேர்இழையீர்!
சீசீ, இவையும் சிலவோ? விளையாடி,

ஏசும் இடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்துஅருள, வந்துஅருளும்

தேசன், சிவலோகன், தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாம் ஆர்ஏல்ஓர் எம்பாவாய்!

இரண்டாவது பாட்டின் பொருள்

தூங்கும் ஒருத்தியைப் பார்த்துப் பலர் பகர்கின்றனர் :

ஒழுங்கான நகைகளை அணிந்தவளே! பேரொளிக் கடவுளிடத்து அன்பு பூண்டு உடம்பு எலும்பாக ஆகுமாறு இரவும் பகலும் நாம் அவன் பெருமை பேசுவது எப்போது? இந்த மலர் அடுக்கிய படுக்கையையே காதலித்து விட்டாயே.

துயில்பவள் கண் திறவாமலே பேசுகின்றாள் :

நேரான ஆபரணம் அணிந்தவர்களே! சீ,சீ, உங்கள் வேடிக்கைகளுள் இவையும் சில போலும்? விளையாடுவதற்கு நான் தூங்குகின்ற இந்த இடம்தான் அகப்பட்டதோ உங்களுக்கு?

வந்தவர்கள் பேசுகின்றனர் :

தேவர்களும் வழிபடுதற்குக் கூசத்தக்க பூப்போன்ற திருவடியை நமக்குத் தந்து அருள்சுரக்க, வந்து அருளுகின்ற ஒளிமயமான சிவலோகநாதன் — தில்லைப்பதியிலே சிற்றம்பலத்திலே நடனமாடும் ஈசனார்க்கு அன்பு உடையார் யார்? நாம் யார்? நாங்கள் சொல்வதைக் கேட்டு ஆராய்ந்துபார், எமது பெண்ணே!

(2) ராகம் கௌளை தாளம் சாபு

	; ; ஸரி	பபமக மா ;	ரீ ; ;	ஸாரீ ரிஸஸா
1.	பா	சம் ப	ரஞ்	சோ திக்
	; ; ஸநி	பா ; ; பா	ஸா; ஸா	நிஸரிஸ ரீ ;
	கென்	பா யி	ராப் ப	கல் நாம்
	; ; ஸரி	மா ; ரீமா	பா ; ;	பாஸ்நி பா ;
2.	பே	சும்	போ	தெப் போ
	; ; ரீ	பபமக மா ;	ரீ ; ரீ	ஸாரீ ரிஸஸா
	திப்	போ ... தா	ர ம	ளிக் கே
	; ; ஸ்ரி	ஸ்நி பா நீ ;	ஸ்ா; ஸ்ா	நிஸ்ரிஸ் ரீ ;
3.	நே	ச ... மும்	வைத் த	ளை ... யோ
	;; ஸ்ரி	ப்ப்ம்க் ம்ா ;	ரீக்ா ம்ா	ஸ்ா ரீ ரிஸ்ஸ்ா
	நே	ரிழை யாய்	நே ரி	ழை யீர்
	; ; பநி	ஸ்ா ; ஸ்ா ;	ஸ்நி பா;	ரீ ஸ்ா ரீ ;
4.	சீ	சீ	யி	வை - யுஞ்
	; ; ரீ	ஸ்ா, ரிஸநிபா	மபநிப நீ	பமகம ரீ ;
	சி	ல . வோ -	வி - ளை	யா - டி -
	ரிஸஸா			
	...			

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்

திருவெம்பாவை — 3

முத்துஅன்ன வெண்நகையாய்! முன்வந்து, எதிர்எழுந்து, என்
அத்தன்,ஆனந்தன், அமுதன் என்று அள்ஊறித்

தித்திக்கப் பேசுவாய்; வந்துஉன் கடைதிறவாய் ;
பத்து உடையீர் ! ஈசன் பழஅடியீர் ! பாங்குஉடையீர் !

புத்துஅடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ ?
எத்தோநின் அன்புஉடைமை? எல்லோம் அறியோமோ?

சித்தம் அழகியார் பாடாரோ ? நம்சிவனை ;
இத்தனையும் வேண்டும் எமக்குஏல்ஓர் எம்பாவாய் !

மூன்றாவது பாட்டின் பொருள்

உறங்குகின்ற பெண்ணைப்பார்த்து வந்தவர்கள் கூறுகின்றனர் :

முத்துப் போன்ற வெண்மையான பற்களை உடையவளே! முன்னே வந்து, எதிரிலே எழுந்து நின்று, "என்னுடைய தந்தை, எனது ஆனந்தன், எனக்கு அமுதானவன்" என்று வாய் ஊறி இனிக்கப் பேசுவாய்; எழுந்து வந்து உனது வீட்டுக் கதவைக்கூடத் திறக்கமாட்டாய்.

உறங்குபவள் உரைக்கிறாள்:

ஈசனிடத்து நீங்கள் பற்று உடையவர்கள்; பழைய அடியார்கள்; உரிமை உடையவர்கள். புதிய அடிமைகளாகிய எங்களுடைய குறைகளை நீக்கி எங்களையும் சேர்த்துக் கொண்டால் கெட்டாபோய்விடும்?

வந்தவர்கள் வழுத்துகின்றனர்:

உன் அன்பு ஏமாற்றந்தானோ?உன் தன்மையெல்லாம் எங்கட்குத் தெரியாதோ? மனச் செம்மையுடையார், நமது சிவபெருமானைப் பாடமாட்டார்களோ? எங்களுக்கு நீ, சிவனைப் பாடவேண்டும், அவ்வளவே, இதை ஏற்றுக்கொள்வாயாக, ஆராய்ந்துபார்; எமது பெண்ணே!

(3) ராகம் தோடி   தாளம் ஆதி

|| ; , ஸரி கமா பா, ம தபதா | ; , ஸ்நி தபா |
1. || முத் தன்ன வெண்நகை யாய் | முன் வந்தெ |

| கா மபதப பம ககா ||
| தி ரெ ழுந் தென் ||

|| ; , கம நிதம மகபம கரிஸா | ; ; ஸரி கமா | பா,ம தா பா ||
2. || அத் தனு னந் ... த | னமு தனென் | றள் ளூ றித் ||

|| ; , பதநீ த தநிஸாநி ரிஸா | ; , தநிஸாரி | ஸா, ஸ்நி நித நிஸ்ரிஸ் ||
3. || தித் திக்கப் பே சுவாய் | வந் துன்க | டை தி ற வாய் ||

|| நித நித ஸ்கரிஸா ஸ்ாரிநி தம தநிஸா | ; , நி ஸ்ரிஸ்நி தப |
4. || ... பத்துடை யீ ... ரீ சன் | ப ழ வ டியீர் |

| கா மபதப பமகரி ஸா ||
| பாங்கு ... டை ... யீர் ||

|| ; , மா மமா மா, கரி கமா | ; , கம நித தம |
5. || பு த் த டி யோம் புன் மைதீர்த் | தாட் கொண்டாற் |

| மா, த தமாக ரிஸரிநி || ஸரிக do. | மா, த தமாக கரிகா |
| பொல் ... லா தோ || ... ,, | பொல் ... லா தோ |

|| ; , கமப பம மக கரி ஸாரிக ஸாரிநி | ஸா, ஸரிகமா |
6. || எத் தோ நின் னன் பு டை மை | யெல் லோ |

| பா பம தா பா ||
| ம றி யோமோ ||

7, 8 அடிகள் 3, 4 அடிகள்போல் பாடவும்.

திருவெம்பாவை — 4

ஒள்நித் திலநகையாய் ! " இன்னம்புலர்ந்தின்றோ? "
"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ ?"

"எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம் ; அவ்வளவும்
கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே,

விண்ணுக்கு ஒருமருந்தை, வேத விழுப்பொருளை,
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துஉள்ளம்

உள்நெக்கு நின்றுஉருக ; யாம்மாட்டோம் ; நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில்" ஏல்ஓர் எம்பாவாய் !

நான்காவது பாட்டின் பொருள்

வந்தவர்கள்:

ஒளிமயமான முத்தனைய பல்லினாய்! இன்னம் விடிய வில்லையா?

தூங்குபவள்:

அழகான கிளிமொழி போன்ற பேச்சையுடைய தோழிகள் எல்லோரும் வந்து விட்டார்களா?

வந்தவர்கள்:

எண்ணிக் கொண்டு உள்ளபடி சொல்லுவோம்; ஆனால், நாங்கள் அப்படி எண்ணுகின்றவரையும் நீ கண்ணை மூடிக்கொண்டு தூங்கி, வீணாகக் காலத்தைப் போக்காமல் இருக்க வேண்டுமல்லவா? ஆதலால் நாங்கள் எண்ணமாட்டோம்; தவிர, விண் உலகுக்கு ஒப்பற்ற அமுதமானவனை, மறைகள் கூறும் மேலான பொருளாக அமைந்தவனை, கண்ணுக்கு இனிமையாகக் காட்சி தருபவன் ஆகிய சிவபெருமானைப்பாடி உள்ளம் நெகிழ்ந்து உள்ளே உருகி நாங்கள் கசிய வேண்டும்; ஆதலால் நீயே எழுந்துவந்து எண்ணிப்பார்த்து எண்ணிக்கை குறைந்தால் திரும்பத் தூங்குவாயாக.

இங்கு "வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?" என்பதை ஒப்ப, "எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்து எண்ணிக்கொள்" என்று திருப்பாவை கூறுகிறது.

இப்பாடலில் மணிவாசகனார் "கண்ணுக்கு இனியானை" என்பது போல, ஆண்டாள் பன்னிரண்டாவது பாசுரத்தில், "மனத்துக்கு இனியானை" என்று கூறுகிறார்.

(4) ராகம்: வசந்தா   தாளம்: திஸ்ர நடை ஆதி.

|| ; ஸமாம   மா மக   தம கா | ; ம   தநி தம | கக   மத   மக   ரிஸ ||

1. || ஒண்ணித்தி   ல ந   கை யாய் | இன்   னம் - பு | லர்ந் -   தின்   றே ||

|| ; ம காரி   ஸநி   தநி ஸா | ; ஸ   கா ம | தா   ஸ்நி ம   தா ||

2. || வண்ணக்கி   ளி   மொழியா | ரெல்   லாரும் | வந்   தா -   ரோ ||

|| ; ஸ்நி தாம   தா   நீ ஸ்ா | ; ஸ்ம   கரிஸ | ஸநி த   மதா ||

3. || எண் ணிக்கொ டு   ள்ள வா | சொல் லுகோம் | அவ் வ   ளவும் ||

|| ; ரிஸாநி   தா ம   த நீ | ஸ்ாநி   தமா | மதம கரிஸ ||

4. || கண்ணைத்து   யின்ற   வமே | கா   லத்தைப் | போ . க்கா தே ||

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை — 5

மால்அறியா, நான்முகனும் காணு, மலேயினே, நாம்
போல்அறிவோம் என்று உள்ள பொக்கங்க ளேபேசும்

பால்ஊறு தேன்வாய்ப் படிறீ ! கடைதிறவாய் ;
ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்,

கோலமும் நம்மைஆட் கொண்டுஅருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் "சிவனே சிவனே" என்று

ஓலம்இடினும் உணராய் ; உணராய்காண் ;
ஏலக் குழலீ ! பரிசுஎல்லோர் எம்பாவாய் !

ஐந்தாவது பாட்டின் பொருள்

திருமாலால் அறியமுடியாதவன்; பிரமனுலும் காண முடியாதவன். ஆனல் மலே போன்றவன் யார்? சிவபெருமான். அவனே நாம் அறிவோம் என்று நினேக்குமாறு பொய் களேயே பேசுகின்றனேயே; பாலும் தேனும் ஊறிக் கசியும் வாயையுடைய ஏ, வஞ்சகீ! கதவைத் திற.

இவ்வுலகமும் வான் உலகமும் வேறு உலகங்களும் அறிதற்கு அரியவன் சிவபெருமான். அப்பெருமானுடைய அழகையும் அவன் நம்மையெல்லாம் அடிமை கொண்டு அருள் சுரந்து சீராட்டுகின்ற பெரும் தன்மையையும் பாடி, ''சிவனே சிவனே'' என நாங்கள் அலறுவதைக் கேட்டுக்கொண்டும் துயில் எழமாட்டாய்.

மயிர்ச்சாந்து அணிந்த கூந்தலே யுடையவளே! இதுதானே உன் தன்மை?
''ஏலக் குழலி!'' என்பதுபோல் ''கந்தம் கமழும் குழலீ'' என்பார் ஆண்டாள் நாச்சியார்.

(5) ராகம் : சங்கராபரணம் தாளம் : ஜம்பை

|| ; கம பா பபமக | மா ; பா பா பா || ; பரிஸ நி தாபா | பமதப பபமமகா ||
1. || மா-ல றி-யா | நான் மு க னுங் || கா ணு ... ம | லே...யி னே. நாம் ||

|| மரி காமா தபமக | மககரி ஸா ; ஸா || ; ஸா பா பபமக | காபம பா; பா ||
2. || ...போல றி.வோ | மென். றுள் ள || பொக்கங்க ளே | பே ... சும் ||

|| ; பாபபமக மா | பாஸ்த நீ: ஸா || ; ஸாஸா கரிஸா | நிரிஸஸ தா நீஸா ||
3. || பாலூ ... று | தேன் ... வாய் || ப டி .. றீ | க . டை திறவாய் ||

|| ; ஸரிகம கரிஸா | ஸநிதப தா; நீ || ஸா, ரிஸ நி தாபா | பமதப மககரிஸா ||
4. || ஞா-ல மே | விண் ணே பி || ற - வே ய | றி ..வ.ரி யான் ||

|| ;கம பா பா ; | பா ; பாதப மா || ; பாஸ் நி தா பா | பமதப பபமகா ||
5. || கோ. லமு | நம் மை யாட் || கொண்ட ருளிக் | கோ.தா ...ட்டுஞ் ||

|| மரி காமா தபமக | கரிபம மககரிஸா || ; ஸப பபமக மரி |
6. || ... சீ ல மும்... | பா...... டிச் || சிவ னே. சி |

| கா; மா பாபா ||
| வ னே யென்று ||

7, 8 அடிகள் 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை — 6

மானே! நீ நென்னலே, "நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன்" என்றலும், நாணமே

போன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவுஅரியான்,

தானேவந்து எம்மைத் தலைஅளித்துஆட் கொண்டு அருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்;

ஊனே உருகாய்; உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்!

ஆறுவது பாட்டின் பொருள்

மானினது கண்ணைப் போன்ற பார்வையைப் பெற்ற பெண்ணே! நீ, நேற்றய தினம், நாளைக்கு வந்து உங்களையெல்லாம் நானே எழுப்புவேன் என்று சொன்னாய்; என்ன ஆச்சு? உனக்கு வெட்கமில்லையா? உன் பேச்சுப் போன திக்கு எது என்றாவது சொல்; உனக்கு இன்னம் விடியவில்லையா? விண்ணும் மண்ணும் வேறும் தெரியமுடியாத சிவபெருமானானவன், அவனாகவே வலிந்து வந்து எங்களுக்குத் தலையாய கருணைபாலித்து, ஆளாகக் கொண்டு அருளும் சிறந்த நீண்ட திருவடியைப் பாடிவந்த நாங்கள் மகிழ, உன் திருவாயைத் திறக்கமாட்டாய்; அவனைப்பாடி உடல் உருகி நிற்கமாட்டாய்; இச்செய்கை உனக்கே பொருந்துவது; எங்கட்கும் ஏனோர்க்கும் தலைவனைப் பாடு.

"எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய்! எழுந்திராய்; நாணாதாய்! நாஉடையாய்!" என்ற திருப்பாவை வரிகள்.

"மானே! நீ நென்னலே நாளைவந்து உங்களை நானே எழுப்புவன் என்றலும் நாணமே போன திசைபகராய்," என்ற இத் திருவெம்பாவை வரிகளோடு ஒப்பன.

(6) ராகம் ஆனந்தபைரவி

தாளம் ஆதி

	‖ ;	கமா ப பா	பா, த	தப பம	; கமா	பமா	பமகரி	கா கா ‖
1.	‖	மா. னே நீ நென்,	ன. லை.		நா.	ளை வந்	துங்.	க ளை ‖
	‖ ;	க மாபா,	பமகரி	ஸா ஸா	; ஸரிரிஸ	நீ	ஸககா	மா மா ‖
2.	‖	நா. னே	யெ. ழுப் பு வ		னென்.	ற. லு	நா.	ண மே ‖
	‖ ;	பத தப	மா பா	ஸா ஸா நீ	; ஸ் மா	க ரி ஸ்	தா, நீ,	ஸா ‖
3.	‖	போ.ன.	தி சை	ப க ரா	இன்	னம். பு.	லர்ந் தின்	றே ‖
	‖ ;	, பா, ஸா	ஸ்நி ரிஸ்	நித பா	; கமா	பமா	பமகரி	கம பா ‖
4.	‖	வா னே	நி ல.	- னே	பி ற	வேய	நி. வ.	ரி.யான் ‖

5, 6, 7, 8, அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்

திருவெம்பாவை — 7

அன்னே ! இவையும் சிலவோ ? பல அமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இருஞ்சீரான்,

சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய் ;
"தென்னா"என் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய் ;

என்னானை என் அரையன் இன் அமுதுஎன்று எல்லோமும்
சொன்னோம், கேள், வெவ்வேறாய் ; இன்னம் துயிலுதியோ ?

வல்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால் ;
என்னே துயிலின் பரிசு ? ஏல்ஓர் எம்பாவாய் !

ஏழாவது பாட்டின் பொருள்

தாயே! உன் விளையாட்டுக்களுள் இவையும் சிலவாமோ? தேவர் பலராலும் நினைக்க முடியாதவன், ஒப்பற்றவன், பெரும் சிறப்புடையவன் ஆகிய இறைவனது அடையாளங்களாகிய சங்கு முதலியவற்றின் ஓசை கேட்கவும் "சிவ சிவா" என்று வாய்திறந்து கூறுவாய்; தென்னவனே என்று செப்புதற்கு முன்னமே தழலிடைப்பட்ட மெழுகு போல உருகிவிடுவாய். ஆனால் இப்பொழுது என்ன செய்கின்றாய்?

என் உடையவனே, என் அரசன் எனவும் இனிய அமுதென்றும் வேறுபலவாகவும் தனித் தனியாக நாங்கள் புகழ்ந்து பாடினோம்; நீ கேட்பாயாக; இன்னும் நீ உறங்குகின்றாயே? வலிய மனம் படைத்த அறிவிலார்போலச் சும்மா கிடக்கின்றாயே; அடடா உறக்கத்தின் சிறப்புத்தான் என்னே?

(7) ராகம் கல்யாணி   தாளம் ஆதி

	‖ ; ரிகா	ரிஸஸா ;	ரீ ரீ கா,	; க மா பபா		மதபம	கரிகா ‖
1.	‖ அன்.	னே	யிவை யுஞ்	சில	வோ ப	ல. வ.	ம. ரர் ‖
	‖ ; கதா	பமா கா	ரீ ஸா ;	; கதா	பாரி	கா மா	பா பா ‖
2.	‖ உன்.	னற். க	ரி யா	ஞெரு	வ.	னி ருஞ்	சீ ரான் ‖
	‖ ; , ஸாஸ	ஸா ஸநிநித	பா பம	கா மபா	தபா	தா நீ	ஸாஸா ‖
3.	‖ சின்னங்கள்	கேட் ...	ப.	சிவனென்றே		வாய்திறப் பாய்	‖
	‖ ; தகரிஸ	ஸ்ரி ஸ்நிதா	பதநீ	ஸ்ாரி	ஸ்நித பா	பம நித	பமகா ‖
4.	‖ தென். ஞ	வென். ஞ.	முன். னந்	தீ.	சேர். மெ	மு...	கொப் பாய் ‖

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை — 8

கோழி சிலம்பச் சிலம்பும் குருகுஎங்கும்;
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்குஎங்கும்:

கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை,
கேழில் விழுப்பொருள்கள், பாடினோம்; கேட்டிலையோ?

வாழி! ஈது என்ன உறக்கமோ? வாய்திறவாய்;
ஆழியான் அன்புடைமை ஆம்ஆறும் இவ்வாறோ?

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழைபங் காளனையே பாடேல்ஓர் எம்பா வாய்!

எட்டாவது பாட்டின் பொருள்

கோழிகள் கூவுகின்றன; பறவைகளெல்லாம் எங்கும் ஒலிக்கின்றன; திருப்பள்ளி எழுச்சியைச் சொல்ல எல்லா இடத்தும் வெள்ளிய சங்கம் முழங்குகின்றன; ஒப்பற்ற பேரொளி வண்ணனாகிய, ஈடில்லாத, பெரிய, அருளுடைய, சிவபெருமானின் நிகர் இல்லாத, மேலான பொருள்களைப் பாடினோம் நாங்கள்; அவைகளை நீ கேட்கவில்லையா? நீ வாழ்வாயாக! இது என்ன உறக்கம்? வாயைத் திறக்கவேமாட்டாய்; ஆணைச் சக்கரமுடைய சிவபெருமானிடம் நீ கொண்ட அன்பு இவ்வளவுதானா? எல்லாம் அழியும் ஊழிக்காலத்தும் தனித்து நிற்கும் ஒருவனை, ஏழைகள் பங்கிலே இருப்பவனாகிய எம்பெருமானைப் பாடு.

"கோழிச் சிலம்பச் சிலம்பும் குருகுஎங்கும்" என்பதோடு
"வந்துஎங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்"
என்ற ஆண்டாள் பாட்டு ஒக்கும்.

ஊழிக்காலத்துத் தனித்து நிற்கும் முதல்வன் சிவபெருமான் என்கிறார் மணிவாசகப் பெருமான். அத்தனிமையைச் சுவைபடக் கழிக்கவே, திருவாசகத்தில் ஒரு பிரதியைச் சிவபெருமான் கையில் வைத்திருப்பதாகக் கூறுவர், பேர் அறிஞர் சுந்தரம் பிள்ளை, தமது மனோன்மணிய நூலில்.

"கடைஊழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்தில், உடையார்உன்
வாசகத்துள் ஒருபிரதி கருதினதே"
என்பது மணிவாசகரைப் பார்த்துச் சுந்தரனார் பாடிய பாட்டு:



மாணிக்கவாசக சுவாமிகள்

(8) ராகம்: காம்போதி தாளம்: ஆதி 2 களை

|| ; தஸா நிதா தா பா நித நீ | ;பதாஸா, | ரிஸ்நித பா பா ||

1. || கோ ழிசி லம் - ப | சிலம் புங் | கு ரு கெங்கும் ||

|| ;, நீ த பா பமதப மகமா | ;கமா பதா | பதரிஸ் நிதபா ||

2. || ஏ ழி ல் வி யம்... ... ப | வியம் பும் வெண் | சங்... கெங் கும் ||

|| ;, மகப தா ஸா ஸா ரீ கமகா | ரீ, மக ரிஸ ஸா | ஸா,ரி நித தபதா ||

3. || கே ழில்ப ரஞ் சோ தி... | கே ழில் ப | ரங் க ரு ணை ||

|| ;, பத ரிஸா ஸ்நி நிதமா பதஸா | ;,தரி நீத ப | பா, தபமகா பாதஸ் ||

4. || கே ழில்வி ழுப் பொ ருள் கள் | பா டினோம் | கேட்டி... லையோ ||

5, 6, 7, 8, அடிகள் 1, 2, 3, 4, போல் பாடவும்

திருவெம்பாவை—9

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!

உன்னைப் பிரான்ஆகப் பெற்றஉன் சீர்அடியோம்,
உன்அடியார் தாள்பணிவோம்; ஆங்குஅவர்க்கே பாங்குஆவோம்;

அன்னவரே எம்கணவர் ஆவார்; அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்;

இன்ன வகையே எமக்குளம்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம், ஏல்ஓர் எம்பாவாய்!

ஒன்பதாவது பாட்டின் பொருள்

முன்னைய எட்டுப் பாடல்களிலும் உறங்கியவர்களை எழுப்பிக்கொண்டு வந்தமை கூறப் பெற்றது. வரவேண்டியவர் எழுந்து வந்து விட்டனர். எல்லோரும் சேர்ந்து பாடிக் கொண்டு தடாகத்தை நோக்கி நீராடச்செல்கின்றனர். இறைவன் புகழ் தெருவெல்லாம் முழங்குகிறது.

இப்பாசுரத்தில் பெண்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படையாகக் கூறிக் கடவுளை வேண்டுகின்றனர்.

முந்திய பழமையான பொருள்கள் எல்லாவற்றுக்கும் முற்பட்ட பழமையானவனே! பின்னே தோன்றும் எப்புதுமைக்கும் மீண்டும் புதுமையாம் பெருமையனே! உன்னைத் தலைவனாகப் பெற்ற, உனது சிறந்த அடியார்கள் ஆகிய நாங்கள், உன் தொண்டர்கள் திருவடிகளையே வணங்குவோம்; அன்னார்க்கே உரிமை உடையம் ஆவோம்; அச் சிவனடியார் களையே, நாங்கள் கணவராக ஏற்போம்; அவர்கள் விரும்பி இடும் பணிகளையே அடிமைகள் போல ஆற்றுவோம். இந்த மாதிரியாக ஒழுக எங்கட்கு எம் கடவுளாகிய நீ அருள் வாயானால், எந்த விதமான குறைபாடும் இல்லாது நாங்கள் வாழ்வோம்.

இப்பாசுரம், ஒத்தகொள்கை உடையவர்களே கணவன் மனைவியாக இணைந்து வாழ்க்கை நடாத்திச் சிறப்புப்பெறத் தக்கவர்கள் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

(9) ராகம் : தன்யாசி **தாளம் : ஜம்பை**

	‖	;	பா	பபமக	மா		|	பா ;	ஸ்நி	ரிஸ்தா	‖	
5.	‖		அன்	ன	வ	ரே	|	யெங்	க	ண வர்	‖	
	‖		பா	கம பா, நி	தப		|	கா கப	மகரீ	ஸா	‖	
	‖	-	ரா	வா	ர		|	வ ரு	கந்	து	‖	
	‖	;	மா மா ;	மா			|	மா ;	மாதப	பம	‖	
6.	‖		சொன்ன	ப			|	ரி	சே		‖	
	‖		கா கம பா;	பா			|	பாஸ்நி	ரிஸ்நித	பா	‖	
	‖	-	தொழும்பாய்	ப			|	ணி	செய்	வோம்	‖	
	‖	;	பா பப மகமா				|	பாஸ்நி	ஸ்ா ;	ஸ்ா	‖	
7.	‖		இன்ன ...	வ			|	கை ......யே			‖	
	‖	;	ஸ்ாநீ	கார்ீ			|	ஸ்ா;	ரிநி	ரீஸா	‖	
	‖		யெமக்	கெங்கோ			|	னல்	கு	தியேல்	‖	
	‖	;	பநிஸா	ஸ்ா ;			|	நீ நீ	ரிஸ	தா பா	‖	
8.	‖		என்	ன	கு		|	றை	யு-	மி லோ	‖	
	‖		கமபநி	ஸரிநிஸ பா			|	மக பம	தப	மகரிஸ	‖	கம
	‖		மே......	லோ...	செம்		|	பா......	.	வாய்...	‖	...

1, 2, 3, 4, அடிகள் 5, 6, 7, 8 போல் பாடவும்

திருவெம்பாவை—10

பாதாளம் ஏழினும்கீழ் சொற்குஅழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே;

பேதை ஒருபால் ; திருமேனி ஒன்றுஅல்லன்;
வேதமுதல் ; விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்,

ஓத உலவா ஒருதோழன்; தொண்டர்உளன்;
கோதுஇல் குலத்துஅரன்தன் கோயில்பிணாப் பிள்ளைகாள் !

ஏதுஅவன்ஊர் ? ஏதுஅவன்பேர் ? ஆர்உற்றார் ? ஆர்அயலார் ?
ஏதுஅவனைப் பாடும் பரிசு ? ஏல்ஓர் எம்பாவாய் !

பத்தாவது பாட்டின் பொருள்

இறைவனது திருவடித் தாமரைகள், கீழ் உலகம் ஏழையும் உருவி, சொல்லின் எல்லையைக் கடந்து விட்டன; அவனது பூ நிறைந்த அழகிய திருமுடியானது, எல்லாப் பொருள்களுக்கும் முடிவாக அமைந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே அவன் பேதையை வைத்திருக்கிறான். அவனுடைய வடிவமோ ஒன்று அல்ல. அப்பெருமான், வேதத்துக்கு முதலாக விளங்குகின்றான். அவன், விண்ணுள்ளாரும் மண்வாழ்வாரும் எவ்வளவுதான் புகழ்ந்தாலும் அப்புகழ்ச்சி ஓதிய காரணமாகச் செருக்குற்று அழியாதவன்; உயிர்கட்கெல்லாம் ஒப்பற்ற தோழன்; அடியார்கள் உள்ளத்தே இருப்பவன். குற்றம் அற்ற மேன்மையை உடைய சிவபெருமானது கோயில் பெண்பிள்ளைகளே! அவன் ஊர் எது? அவன் பெயர்தான் என்ன? அவனுக்கு உற்றார் யார்? மற்றார் தாம் யார்? அப்பெருமானைப்பாடும் வகை யாது?

(10) ராகம்: ஷண்முகப் பிரியா — தாளம்: ஆதி

	;, பா பாப பா, பதநி தபபா	;, தாநிதப	பா, ம காரீ
1.	பா தாள மே ழினும் கீழ்	சொற்கழிவு	பா த மலர்
	; கதபம கா கரீ ஸநீ ஸா	; ரீ கா, ம	பா,ப தநி தபபா
2.	போ தா ர் புனை முடிவு	எல்லாப் பொ	ருண் முடி வே
	;, ஸா தா நி ஸா; ஸா;	;, நிக ரீக	கரிஸா நிஸ ரீகரி
3.	பே தை யொ ரு பாற்	திரு மேனி	ஒன்... றல் லன்
	ஸரிஸ ,,	;, ஸகரீக	கமபம கா ரீ
	... ,,	திருமேனி	ஒன்... றல் லன்
	;, நீதிநீ ஸா ஸரி கரி ஸா	;, நீரிஸா	தா ; தநி தபபா
4.	வேத முதல் விண்ணோ ரும்	மண்ணும் து	தித் தா லும்

5, 6, 7, 8, அடிகள் 1, 2, 3, 4, போல் பாடவும்

திருவெம்பாவை—11

மொய்ஆர் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி,

ஐயா! வழிஅடியோம்; வாழ்ந்தோம்காண்! ஆர்அழல்போல்
செய்யா! வெண் நீறுஆடி! செல்வா! சிறுமருங்குல்

மையார் தடம்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்

உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உயந்துஒழிந்தோம்;
எய்யாமல் காப்பாய், எமையேல்ஓர் எம்பாவாய்!

பதினொன்றாவது பாட்டின் பொருள்

வண்டுகள் நிறைந்த பெரிய தடாகத்திலே நுழைந்து, ‘‘முகேர்’’ என்ற ஓசை எழும்படி, கைகளினாலே நீரை இறைத்துக் குளித்துக் குளித்து, உனது திருவடிகளைப்பாடி, ஐயனே! வழியடியாராக வாழ்ந்தோம் நாங்கள்; நிறை நெருப்புப் போலச் சிவந்தவனே! முழு வெண்நீற்றில் மூழ்கியவனே! சென்றடையாத திருஉடையானே! சிறு இடையையும் மை உண்ட பெரிய கண்களையும் கொண்ட உமையாள் கணவா! தலைவனே! நீ அடிமையாக்கி அருளின் திருவிளையாட்டில் தேறி, கதியடைகின்றவர்கள் பிழைக்கும் வகையெல்லாம் உய்ந்து விட்டோம்; இனி நாங்கள் எய்ப்பு அடையாமல் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

(11) ராகம்: உசேனி தாளம்: சாபு

	‖	; ;	ரீ	|	ஸா ; ;	ஸா	‖	பா ; ;	|	பத நித மா ; ‖
1.	‖		மொய்	|	யார்	த	‖	டம்	|	பொய் ... கை ‖
	‖	; ;	மா	|	பதநீ	பததப	‖	மகமபாம	|	காரிம கரிகஸ ‖
	‖		புக்	|	கு...	மு...	‖	கே	|	ரென்... ன...... ‖
	‖	; ;	ரிக	|	மா பா ;	தப	‖	மகமதபம	|	காரீ ரீகம ‖
2.	‖		கை.	|	யாற்.	கு.	‖	டைந்......	|	...... து... ‖
	‖	ரீகஸ	ஸஸ	|	ஸா ; ;	பம	‖	பா பாஸ்நி	|	நீ தா பா ; ‖
	‖	...	குடைந்	|	து	உன்	‖	க ழல்	|	பா டி ‖
	‖	; ;	பா	|	பாஸ்நி	நிதமா	‖	பா நித நீ	|	ஸ்ா ; ஸ்ா ; ‖
3.	‖		ஐ	|	யா	வ	‖	ழி ய ...	|	டி யோம் ‖
	‖	;	தநிஸா	|	ரிம கரி ஸா ;		‖	ஸ்நி ரிஸ நித	|	பா ; நிதாம ‖
	‖		வாழ்...	|	ந்தோங்...கா		‖	ஞ ர ...	|	ழல் போற் ‖
	‖	; ;	ரீ	|	ஸா ; ;	ஸா	‖	ஸ்நி ஸரீஸ்	|	நிதபா மா ; ‖
4.	‖		செய்	|	யா	வெண்	‖	ணீ	|	ரு... டி. ‖
	‖	;	மாபா	|	ஸ்நிஸா	பததப	‖	மகம பாம	|	காரிம கரிகஸ ‖
	‖		செல்	|	வா...	சி...	‖	ரு ம ...	|	ருங்... குல்... ‖

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை—12

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன்,நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்

கூத்தன்,இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி,

வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்புஅரவம் செய்ய, அணிகுழல்மேல் வண்டுஆர்ப்ப,

பூத்திகழும் பொய்கை குடைந்து,உடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனை நீர் ஆடேல்ஓர் எம்பாவாய்!

பன்னிரண்டாவது பாட்டின் பொருள்

கட்டுப்படுத்திய பிறவித் துன்பம் நீங்க, நாம் களித்துத் திளைக்கும் தூயவன்; நலம் திகழும் தில்லைச் சிற்றம்பலத்திலே, அனல் தாங்கி ஆடுகின்ற நடராஜன்; வானுலகத்தையும் இந்த மண்ணுலகத்தையும் பிற எல்லா உலகங்களையும் படைத்தும், காப்பாற்றியும், மறைத்தும் விளையாட்டயர்வான்; அப்பெருமானுடைய புகழ்ப்பேச்சுக்களைப் பேசி, வளையல்கள் ஒலிப்ப, நீண்ட மேகலைகள் ஆரவார ஒலி எழுப்ப, அழகிய கூந்தலின் மீது வண்டுகள் இசைபாட, மலர் மல்கிய குளத்திலே குளித்து, எம்மையாளுடையான் பொன்னடிகளை வணங்கி, பெரிய சுனை நீரினும் ஆடுவோமாக.

(12) ராகம்: அடாணா தாளம்: கண்டஜாதி ஜம்பை

	‖ ; ரீ, ம பா பா பா பா பா நிநிபா	; பா	பா;	நிநிபா	‖
1.	‖ ஆர்த்த பி ற வி து யர் கெ ட	நா	மார்த்	தா டும்	‖
	‖ ; ஸ்ா, நி பம ரிம ரிஸ ரீ மா பா நீ	பா பா	பா ;	த நீப	‖
2.	‖ தீர்த்தனன் தில் லை சிற்றம்பலத்	தே தீ	யா	டும்	‖
	‖ ; பா, ஸ் ஸா ஸா ஸா நீஸா ரீஸா	ஸா ஸா	தா ;	தா ;	‖
3.	‖ கூத் த னிவ் வா னுங் கு வ லய	மும் எல்	லோ	மும்	
	‖ ; தா, த தா தா தா நீ நிரி ஸநி பா	பா பத	நீபா	; ;	‖
4.	‖ காத் தும் ப டைத் துங் க ரந் தும் வி	ளை யா	டி		‖

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

Q23:41725
N57

76918

திருவெம்பாவை—13

பைங்குவளைக் கார்மலரால், செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகுஇனத்தால், பின்னும் அரவத்தால்,

தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினல்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றுஇசைந்த

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து,நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்ப,

கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க,
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய்!

பதின்மூன்ருவது பாட்டின் பொருள்

இப்பாசுரத்தில் முதல் மூன்று அடிகளிலும் சிவபெருமான், தேவி, மடு ஆகிய மூன்றுக்கும் உவமை உரைக்கப்பெறுகிறது.

பைங்குவளைக் கார் மலர்: பசிய கரிய குவளைப்பூ. செங்கமலப் பைம்போது; பசுமை மிக்க செந்தாமரை மலர். இந்த நீர்ப் பூக்கள் இரண்டும் தடாகத்துள் பின்னிக் கிடக்கின்றன. கருங்குவளை உமையவளையும், செவ்விய தாமரை சிவபெருமானையும் காட்டும் நிறங்கள். அவ்இரண்டு நிறங்களின் இணைப்பு உமை ஒரு கூறுடைய அம்மையப்பனின் வடிவத்தை நினைப்பூட்டுகிறது.

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போல விளங்குகின்றது, பொங்கும் மடு. ஒரு காரணம், பிராட்டி மேனியைக் காட்டும் நீலோற் பல மலரும், பிரான் வடிவத்தை உணர்த்தும் செந்தாமரைப் பூவும் மடுவில் உள்ளன. அவ்விரண்டும் கலந்து கிடப்பதானது, மாதாடும் பாகத்தனை நமக்குக் காட்டுகிறது. மற்ருெரு காரணம், அங்கம் குருகு இனத்தால்: (மடுவுள்) அழகிய பறவைக் கூட்டம் தங்குவதால்; (தேவிக்கு) உடம்பின் உறுப்பாகிய கைகளில் வளைகளின் கூட்டம் கிடப்பதால்; (இறைவனுக்கு) உடம்பிலே குருக்கத்தி மலர்கள் மிளிர்வதால். வேருெரு காரணம், பின்னும் அரவத்தால்: (பொய்கைக்கு) கலந்து வரும் ஓசையால்; (இறைவிக்கும் இறைவனுக்கும்) பின்னிக் கிடக்கும் பாம்புகளால். இன்னொரு காரணம், தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினல் என்பது. இது நீர்நிலைக்கும் அம்மையப்பனுக்கும் பொருந்துவது. நீர்நிலை சார்வாரும் அழுக்கைக் கழுவுகின்றனர்; கடவுளை அடைவாரும் அழுக்கைப் போக்குகின்றனர். ஆனல் ஒரே ஒரு வேறுபாடு. மடுவைச் சார்வார் கழுவுவது புற அழுக்கு; இறையை அடைவார் கழுவுவது அக அழுக்கு.

இன்னபல காரணங்களால், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போலப் பொருந்திய நீர் பொங்கும் தடாகத்திலே, புக்குப் பாய்ந்து பாய்ந்து, நமது வளையல் ஒலி செய்ய, நூபுரங்கள் பின்னி அலற, கொங்கைகள் பூரிப்படைய, ஆடும் நீர் மேல் ஓங்கி வழிய, அழகிய தாமரைத் தடாகத்திலே மூழ்கி ஆடுவோமாக.

அங்கம், க. அழகு; உ. உடம்பின் உறுப்பு.
குருகு: க. பறவை; உ. வளையல்; ௩. குருக்கத்திமலர்.
அரவம்: க. ஓசை; உ. பாம்பு.

(13) ராகம் : ஹிந்தோளம் தாளம் : ஆதி

|| ; நிஸா ககா மா மா தாமா | , மதா நிதா | மா, க கமகஸ ||
1. || பைங்குவளை கார் ம லரால் | செங் கமல | பைம் போதால் ||

|| ; கமா தமா மகஸநி தநிஸா | ; நிஸா ககா | மா ; ததமக ||
2. || அங் கங்குரு கி னத்தால் | பின் னும் | அர வத்தால் ||

|| மா ககா ம மா தாநீ நிததா மா | ; தநீஸ் ஸ்ா | க்க்ஸ் நிஸ்ா ; ||
3. || தங்கள் மலங் கழு வு வார் | வ ந்து சார் | த லி னல் ||

|| ; ஸ் ம்ா க்ஸ்ா ஸ்நிதம தநிஸ்ா | ஸ்க்ஸ் நிஸ்நிதம | மகதம கமகஸ ||
4. || எங் கள் பி ராட்டி யு மெங் | கோ னும் போன் | றி சைந் த ||

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை—14

காதுஆர் குழைஆட, பைம்பூண் கலன்ஆட,
கோதை குழல்ஆட, வண்டின் குழாம்ஆட,

சீதப் புனல்ஆடி, சிற்றம் பலம்பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருள்ஆ மாபாடி,

சோதி திறம்பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி,
ஆதி திறம்பாடி, அந்தம்ஆம் ஆபாடி,

பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி, ஆடேல்ஓர் எம்பாவாய்!

பதினான்காவது பாட்டின் பொருள்

காதில் பொருந்திய தோடு ஆடவும், பசும்பொன் ஆபரணங்கள் அசையவும், கூந்தலும் அதிலே சூட்டிய மாலையும் ஆடவும், அங்கே படிந்திருக்கின்ற வண்டுக் கூட்டங்கள் சுற்றி அலையவும், இத்தனை ஆட்டத்தோடு குளிர்ந்த நீரிலே மூழ்கி ஆடி, சிற்றம்பலத்து எங்கள் செல்வத்தைப் பாடி, மறைப் பொருளைப்பாடி, அப்பொருளாகும் முறைமையைப் பாடி, ஒளியின் திறத்தைப்பாடி, அச்சோதி அணிந்த கொன்றை மாலையைப்பாடி, அவனது ஆதித்தன்மையைப் பாடி, முடிவையும் பாடி, உலக மாயையினின்றும் நம்மை வேறுபடுத்தி, வளர்த்து எடுத்த, வளையை அணிந்த அன்னையின் திருவடிச் சிறப்பைப்பாடி ஆடுவோமாக.

இப்பாடலில், எல்லாம் ஒரே ஆடலும் பாடலுமே.

(14) ராகம் : மோஹன்   தாளம் : ஜம்பை

|| ; ஸரி கா ; கா | கா ; கா ; கா ||
1. || கா தார் கு | ழை யா ட ||

|| ரீ கா பா ; பா | கா கா பகதப கரி ||
|| — பைம் பூண் க | ல ஞ ட ||

|| ஸத ஸரி கப கா ரீ | ஸா ; ஸா, த தா ||
2. || ... கோ தை கு | ழ லா ட ||

|| பா ஸரி கா ; கா | பா, க பா ; பா ||
|| ... வண் டின் கு | ழா மா ட ||

|| ; கா பா ; தா | ஸ்ா ; ஸ்ா ; ஸ்ா ||
3. || சீ தப் பு | ன லா டி ||

(1) || ; ஸ்ா ரிக ரீ ஸ்ா | ஸதரிஸ தா பா தா ||
|| சிற் றம் ... ப | லம் பா டி ||

(2) || ; ஸ்ரி கப கரி ஸ்ா | ... ||
|| சிற் றம் .. ப | ... ||

|| ; தா கா ரீ ஸா | ஸதரிஸ தா பா தா ||
4. || வே தப் ... பொ | ருள் பா ... டி ||

|| ஸ்ா ; தா தா பா | கபதஸ் தப கப கரி — || ஸத
|| யப் பொ ரு ளு | மா ... பா ... டி || ...

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை—15

ஓர்ஒருகால் எம்பெருமான் என்று என்றே, நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள்; சித்தம் களிகூர,

நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப,
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்;

பேர்அரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆம்ஆறும்,
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்,

வார்உருவப் பூண்முலையீர்! வாய்ஆர நாம்பாடி,
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய்!

பதினைந்தாவது பாட்டின் பொருள்

ஒரு பெண்ணானவள், ஒவ்வொரு சமயம் ''எம்பெருமான்'' என்று சொல்லிச் சொல்லி, நம் பெருமானுடைய சிறப்பைச் சொல்வதில் ஒருகாலும் வாய் ஓயாமல் இருக்கிறாள்; மனம் மகிழ்ந்து, நீர் ஒரு காலும் நீங்காமல் நீண்ட தாரையாகக் கண்கள் உகுப்ப, பூமியிலே, ஒரேயடியாக வீழ்ந்து வணங்குகின்றாள்; தேவர்களைத் தொழமாட்டாள்.

கச்சை ஊடுருவிச் செல்லும் நகை அணிந்த கொங்கைகளையுடையீர்! பெரிய மன்னனாகிய கடவுளிடத்து இப்படியாக ஒரு மங்கை பயித்தியம் கொள்ளும் விதத்தையும், இம்மாதிரியாக ஆட்கொள்ளும் வித்தகர் யாரோ, அவர் பாதங்களையும், வாய் குளிர நாம் பாடி, அழகிய வடிவங்கொண்ட மலர்ப் புனலிலே மூழ்கி ஆடுவோமாக.

(15) ராகம்: லதாங்கி. தாளம்: ஆதி.

|| ;, காரிகா மா, பா பா தநி | தபமா, பதநி தபமா | பா, ம கரிகா ||
1. || ஒரொரு கா லெம் பெரு | மான் என்றென்றே.. | நம் பெருமான் ||

|| ;, கா தபம கா ரீ கரி ஸா | ;, பா க மா | பா,ப தநி தபபா ||
2. || சீ ரொரு கால்வாயோ வாள் | சித் தம் க | ளி கூ ... ற... ||

|| ;, ஸா தநீ ஸா, ஸகரிஸா | ;, ஸரி கா ரி | ஸா,ரி நீ ஸா ||
3. || நீ ரோரு கால் ஓ ... வாள் | நெடுந் ... தாரை | கண் ப ணிப்ப ||

|| ;, ஸா தநீ ஸா, நி ஸா ரீ | ; ஸரி கதபம கரி | ஸா ரீ நீஸா ||
|| நீ ரொரு கால் ஓ ... வாள் | நெடுந்தா... ரை | கண் ப ணிப்ப ||

|| ;, ஸகரிஸா தா, தா நி ஸா | ரீ, நிரிநி தப | பா,ம கரி கா ||
4. || பா-ரொரு கால் வந் தனை | யாள் விண் ணோரைத் | தான் பணியாள் ||

5, 6; 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை—16

முன்இக் கடலைச் சுருக்கி, எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து,எம்மை ஆள்உடையாள் இட்டுஇடையின்
மின்னிப் பொலிந்து,எம் பிராட்டி திருஅடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பி, திருப்புருவம்
என்னச் சிலைகுலவி, நம்தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரிவுஇலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய், மழையேல்ஓர் எம்பாவாய்!

பதினாறுவது பாட்டின் பொருள்

மழைப் பாட்டு

கடைசி வரியில் உள்ள மழை என்ற சொல்லை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மழை என்றால் மேகம்.

மேகமே! முதலில் இந்தக் கடலையே குடித்துச் சுருக்கி, பிறகு எழுந்து, முன்னே கலைமகள் உருவாக விளங்கிய நீ; எம்மையாளுடைய உமையவள் நிறத்தைப் பெற்று, அப் பெருமாட்டியின் சிற்றிடையைப் போல மின்னி விளங்கி, அவ் அம்பிகை பாதத்தை அழகு செய்கின்ற பாதசரத்தைப் போல ஓலமிட்டு, அத்தேவியின் அழகிய புருவத்தைப் போன்று வானவில் வீசி, நம்மை ஆட்கொள்ளும் அத் தாயைப் பிரியாத நம் தலைவனுடைய அடியார்க்கு நினைந்து அவள் முன் சுரக்கும் இனிய அருளைப் போலப் பொழிவாயாக.

மேகம் கடலைக் குடித்துக் கடலைச் சுருங்கச் செய்கிறது என்ற கொள்கையைத் திருவள்ளுவர்.

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்; தடிந்துஎழிலி
தான்நல்கா தாகி விடின்"

என்ற குறளால் கூறுகிறார்.

தடிந்து : சுருக்கி.
இதனை, "கடல்குறை படுத்தநீர்
கல்குறை படஎறிந்து"
என்று பரிபாடல் கூறும்.
கடல் குறைபடுத்த: கடலைச் சுருக்கிய.

"முன் இக் கடலை" என்ற இப் பாசுரத்தைப் பெரிதும் ஒப்பது, ஆண்டாளின் "ஆழி மழைக் கண்ணா" என்ற நான்காம் திருப்பாவைப் பாசுரம். அது இந்நூலின் பிற்பகுதியாக அமைந்திருக்கிறது. இரண்டின் ஒற்றுமையையும் ஆண்டுக் கண்டு மகிழ்க.

சங்கரநயினர்கோவில்

(16) ராகம்: வராளி. தாளம்: ஆதி (2 களை)

	‖ ; மபா	தபம	தபமக	கா, ரிஸா	| ; ஸநீ	ககா	| பா பா	தநி	தபபா ‖
1.	‖ முன்	னிக்க	ட	... ஊ	| சுருக்கி யெ		| ழுந்	துடை	யாள் ‖
	‖ ;; பா	தபா	பா,ம	தபதா	| ; ஸ்ா	நிதபா	| பமகா	கரிஸா	‖
2.	‖ என்ன	தி	கழ்ந்	தெம்மை	| யா	ளுடையா	| ளிட்டி	டையின்	‖
	‖ ;, தநிஸ்நி	தபமா	தநீஸா	ரிக ரிஸ்ஸா	| ; நிஸா	ரிஸா	|		
3.	‖ மின்	னிப்	பொலிந் ...	தெம்	| பிராட்டி தி		|		
	| ஸ்ா	ஸ்நிதா பத	நிஸ்ரிஸ்		‖ ஸ்ாரிநி do				
	| ரு	வ ... டி	மேற் ...		‖ ...				
	| ஸ்ா	ஸ்நிதா நீ	ஸ்ா		‖				
	| ரு	வ ... டி	மேற் ...		‖				
	‖ ; நிஸா	ரிஸ்ா	ஸ்நிதா	நீஸ்ரி ஸ்ா	| ரிநி	தநிஸ்ா,	ஸ்நிதா	ப	|
4.	‖ பொன்	னஞ்சி	லம் ... பிற்	...	| ...	சி லம்	பித்	தி	|
	| பமகா	கா	மபதநி தபமக		‖ கரிஸா				
	| ருப்	பு	ரு		‖ வம் ...				

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை — 17

செங்கண் அவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக

கொங்குஉண் கரும்குழலி நம்தம்மைக் கோதாட்டி,
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்துஅருளி,

செங்கமலப் பொற்பாதம் தந்துஅருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோம்கட்கு ஓர்அமுதை,

நங்கள் பெருமானைப் பாடி, நலம்திகழ,
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய்!

பதினேழாவது பாட்டின் பொருள்

கொங்கு உண் கரும் குழலி!: மணம்கொண்ட கரிய கூந்தலை உடையாளே! செங்கண்மாலிடத்தும் பிரமனிடத்தும் வானோரிடத்தும் ஏனோரிடத்தும் இல்லாத ஒப்பற்ற இன்பத்தை நாம் அடையும்படி நம்மைப் பாராட்டி, இவ்விடத்திலே நமது வீடுகள்தோறும் எழுந்தருளி, தமது செந்தாமரை போன்ற பொன்னடிகளை நமக்குத் தந்தருளிய சேவகனை, பெருங் கருணைத் தடங்கடலாகிய மன்னனை, அடியவர்களாகிய நமக்கு நிறைந்த அமுதமானவனை, நமது பெருமானைப் பாடி, நன்மை பெருக, தாமரைத் தடாகத்திலே குதித்து ஆடுவோமாக.

இங்கு "கொங்கு உண் கருங் குழலீ!" என்பதும், திருப்பாவையில் "கந்தம் கமழும் குழலீ!" என்பதும் ஒக்கும்.

இப்பாட்டின் கடைசி அடி திருவெம்பாவை 13-ம் பாட்டிலும் அப்படியே ஆளப்பட்டிருக்கிறது.

(17) ராகம்: பைரவி தாளம்: சாபு

|| ; ; ரீ | ஸா ; ஸா ; || நீ ; நிரி | ஸநிதா பா ; ||
1. || செங் | க ண || வன் ... | பாற்... றி ||

|| தா நீ ; | ஸ்நி தா பா ; || மகா மாத | பமகா ரீ ; ||
|| சை ... | மு கன் || பால் தே | வர்... கள் ||

|| ரீகஸ கரி | ஸநிதா நீஸா || ரீ ; ரீ | ரீகம ரீகஸ ||
2. || பால் எங் | கு மில் || லா ... | த தோ... ||

|| ; ; ரிக | மா ; பததப || மாகா மத | பமகா ரீ ; ||
|| ரின் | பம் நம்... || பா... ல... | தா... க ||

|| ; ; பா | பாதம பா ; || தா, நீ, | ஸ்ா ; ஸ்ா ; ||
3. || கொங் | குண்... க || ருங் கு | ழ லி ||

|| ; ; தநி | ஸ்ா ; ஸ்ா ; || ஸ்ாநி ரிஸ்ா | நீ தா பா ; ||
|| நந் | தம் மை || கோ ... | தா ட்டி ||

|| ; ; கரி | ஸ்ா ; ஸ்ா ; || நீ ; நிரி | ஸ்நிதா பா ; ||
4. || இங் | கு நம் || இல் ... | லங்... க ||

|| தா, நிஸ்ா | ஸ்நிதா பா ; || மாகா மத | பமகா ரிகமப || தநிஸ்ரி
|| டோ | று... மெ || ழுந் ... | த... ரு... || ளி...

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை — 18

அண்ணு மலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை,வீறு அற்ருல்போல்

கண்ஆர் இரவு கதிர்வந்து கார்கரப்ப,
தண்ஆர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகல,

பெண்ஆகி ஆணாய் அலியாய்ப் பிறங்குஒளிசேர்
விண்ஆகி மண்ஆகி இத்தனையும் வேறுஆகி,

கண்ஆர் அமுதமுமாய் நின்ருன் கழல்பாடி,
பெண்ணே ! இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய் !

பதினெட்டாவது பாட்டின் பொருள்

பெண்ணே !, மங்கையே ! அண்ணுமலை அண்ணலின் திருவடித் தாமரைகளைச் சென்று வணங்கும் தேவர்களுடைய மகுடங்களிலுள்ள இரத்தினக் குவியலானது, (அண்ணுமலையான் ஜோதியின் முன்) பெருமை யிழந்தாற்போல, எங்கும் நிறைந்த சூரியனது ஒளி வந்து இருளை மறைக்க, குளிர்ந்த தம் ஒளிகளை இழந்து நட்சத்திரங்கள் நீங்கி ஒழிய, பெண்ணுகியும் ஆணுகியும் அலியாகியும், விளங்குகின்ற ஒளியுடை வானுகியும், நிலனுகியும், இவ்வளவு பொருள்களும் கடந்து வேருகியும், கண் நிறைந்த அமுதமும் ஆகி நின்ற கடவுளுடைய கீர்த்தியைப் பாடி, இந்தப் பூ நிறைந்த நீரிலே பாய்ந்து ஆடுவோமாக.

(18) ராகம்: பேஹாக். தாளம்: ஆதி.

	;, ஸா	காம	பா ; ;	பா	; கமா	பதப	மத	பம	மா கா
1.	அண்	ணும	லை	யான்	அடிக்	கமலம்	சென்	றி	றைஞ்சும்
	;, ஸ்ா	ஸ்ாஸ்	ஸ்ஸ்நித	பா ;	; பதா	நிதப	பம	கம	கரிஸா
2.	விண்	ணோர்மு	டி...	யின்	மணித்	தொகை	வீ ற	ற்ருல்	போல்
	;, ஸ்நி	தபபா ப	தநிர்ஸ்	ஸ்நிநீ	; தநீ	ஸ்ாஸ்	ஸ்ா,	ஸ்	ஸ்ாஸ்ா
3.	கண்	ணு...ரி	ர...	...வி	கதிர்	வந்து	கார் க	ரப்	ப
	;, ஸ்ா	ஸ்ாஸ்	ஸ்ஸ்நித	பா பா	; பாத	நிதா	பா,	ம	மாகா
4.	தண்ணுர் ஒ	ளிம		முங்கி	தாரகை	கள்	தா ம	க	ல

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருவெம்பாவை — 19

உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்குஅப் பழம்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்,

எங்கள் பெருமான்! உனக்கொன்று உரைப்போம்;கேள்.
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க;

எம்கை உனக்குஅல்லாது எப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல்எம்கண் மற்றுஒன்றும் காணற்க;

இங்குஇப் பரிசே எமக்குஎம்கோன் நல்குதியேல்,
எங்குஎழில்என் ஞாயிறு? எமக்குஏல்ஓர் எம்பாவாய்!

பத்தொன்பதாவது பாட்டின் பொருள்

எங்கள் பெருமானே!; "உம் கையிலுள்ள குழந்தை உனக்கே அடைக்கலப் பொருள்" என்ற அந்தக் காலத்தில் தோன்றிய அப்பழமொழியைப் புதுப்பிக்க நாங்கள் அஞ்சுவதால், உனக்கு ஒரு விண்ணப்பம் செய்கின்றோம்; கேட்டருள்க. எமது கொங்கைகள் உனது அடியாரல்லாதார் புயங்களை அணையாதொழிக; எங்கள் கைகள், உனக்கன்றி எந்த ஏவலையும் ஆற்றாதிருக்க; எங்களுடைய கண்கள், இரவும் பகலும் உன்னையன்றி வேறு எதனையும் காணாதொழிக; இவ்விடத்து இந்தத் தன்மையையே எங்கட்கு எங்கள் தலைவனாகிய நீ அருள்வாயானால், சூரியன் எந்தத் திசையில் முளைத்தாலும் அதைப்பற்றி எங்களுக்கென்ன?

"முன்னைப் பழம் பொருட்கும்" என்ற ஒன்பதாவது பாடல் கருத்து இப்பாட்டின் கருத்தோடு ஒத்தது.

(19) ராகம்: பௌளி தாளம்: ஆதி

|| ; , கா ககா பா ; ; பா | ; கபா தபா | பகதப கபகரி ||

1. || உன்கை யிற் பிள் ளை | உனக்கே அ | டைக்க லமென் ||

|| ரீ, கப கரீ ஸா நித ஸாஸா | ; ஸரீ ககா | பா ; தா பா ||

2. || று அங் கப்ப ழுஞ் சொல் | புதுக்கு மெம் | அச் சத்தால் ||

|| ; , கா ப தா ஸ்ா ; ; ஸ்ா | ; ஸ்ரிகரி ஸ்ா | ஸ்ா ஸ்நிதா தா ||

3. || எங்கள் பெ ரு மான் | உனக் கொன்று | ரைப் போம் கேள் ||

|| பா பதா ரிஸ்ா ஸ்நிதா நிதபா | ; கபா தபா | பகதப கபகரி || ஸா

4. || எங் கொங்கை நின் னன்ப | ரல்லார் தோள் | சே... ரற்க ||

திருவெம்பாவை — 20

போற்றி, அருளுகநின் ஆதியாம் பாதமலர்;
போற்றி, அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்;
போற்றி,எல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்;
போற்றி,எல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்;
போற்றி,எல் லாஉயிர்க்கும் ஈறாம் இணைஅடிகள்;
போற்றி,மால் நான்முகனும் காணாத புண்டரீகம்;
போற்றி,யாம் உய்யஆட் கொண்டுஅருளும் பொன்மலர்கள்;
போற்றி,யாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்!

இருபதாவது பாட்டின் பொருள்
வணக்கப் பாட்டு

வணங்குகின்றோம்; உன்னுடைய ஆதியாகிய திருவடித் தாமரைகளை எங்கட்குத் தந்தருள்க.

வணங்குகின்றோம்; உனது, எப்பொருட்கும் முடிவாக உள்ள சிவந்த தளிர் போன்ற அடிக்கமலங்களை அளித்தருள்க.

வணக்கம் செலுத்துகின்றோம்; எல்லா உயிர்களும் உண்டாகக் காரணமாக இருந்த உன் பொன்னடிகளை.

வணக்கம் செலுத்துகின்றோம்; எல்லா உயிர்கட்கும் இன்பம் தந்து காப்பாற்றும் உன் அழகிய திருவடிகளை.

கும்பிடுகின்றோம்; எல்லா உயிர்களுக்கும் முடிவு கொடுக்கும் இரண்டு பாதங்களையும்.

கும்பிடுகின்றோம்; திருமாலும் பிரமனும் காணமுடியாத பாதார விந்தங்களை.

போற்றுகின்றோம்; நாங்கள் கடைத்தேற ஆட்கொண்டு அருளும் தங்கக் கால்களை.

வணங்கி, யாம் மார்கழித் திங்கள், நீராட்டத்தை ஆடுவோமாக.

பாதமலர், செந்தளிர்கள், பொற்பாதம், பூங்கழல்கள், இணையடிகள், புண்டரீகம், பொன் மலர்கள் ஆகிய அனைத்தும் இறைவனுடைய திருவடிச் சிறப்பைக் குறிப்பன. திருவெம்பாவை முதற் பாட்டு "ஆதியும் அந்தமும்" என்று தொடங்குகிறது. திருவெம்பாவைக் கடைசிப் பாட்டு "ஆதியாம் பாதமலர்" என்றும் "அந்தமாம் செந்தளிர்கள்" என்றும் முடிகிறது.

திருவெம்பாவை
முற்றுப்பெறுகிறது.

(20) ராகம் : சுருட்டி   தாளம் : ஆதி

	;, ரீ ம பா	பா பா	பா பா	;, ரிம	பநித	பமமா,		கபமரீ
1,	போற்றிய	ரு ளு க	நின்	ஞ	தியாம்	பா	தம	லர்
	;, ரிமரிரீ	ஸா நீ	ஸா ஸா	;, ரீ	மமா	மா	பாநித	பமகரி
2,	போற்,றிய	ரு ளு க	நின்	னந்த	மாஞ்	செந்	தளிர்	கள்
	;, நிஸ்நிதா	பா,நி	மாபா	;, மபஸ்	நித	நீ ;	ஸ்ா	ஸ்ா
3.	போற்றியெல்	லாஉ	யிர்க்கும்	தோற்	றமாம்	பொற்	பா	தம்
	;, நீ நி நீ	நிதபப	பநிஸ்ரி	,ஸ்ா ரிஸ	நித பா	ரிம	பாநித	பமமா மக
4.	போற்றியெல்	லாஉ	யிர்க்கும்	போக	மாம்	பூங்	க...	ழல் கள்

|| ரிமஸ

|| ......

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் போடவும்.

திருப்பள்ளி எழுச்சி

மாணிக்கவாசகர்

திருப்பள்ளி எழுச்சி

இப்பாசுரம் அடிகளார் திருப்பெருந்துறையில் அருளியது. விடியற்காலத்தில் இறைவனைத் துயில் எழுப்புவதாகத் திருப்பள்ளி எழுச்சி பாடியருளினர். இறைவனும் தூங்குவானே அவனையும் எழுப்பவேண்டுமோ என்ற வினக்கள் இக்காலத்தில் எழலாம். அதன் உண்மை ஆகம சாஸ்திரமறிந்தவர்களும் யோக மாந்தருமே உணருவர். சிவன்கோயில்களில் ஆறுகால பூஜை விதிக்கப் பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. இவ் ஆறுகால பூஜையும் குண்டலினி சக்தி யானது ஆறு ஆதாரங்களையும் ஒவ்வொன்ருய் பேதித்து மேல் நோக்கிச் செல்லுங் கால் சாதகனுக்கு அவ்வவ்வாதாரங்களில் ஏற்படும் அநுபவங்களே யாகும். ஆங்காங்கு தோன்றும் ஒளி, நிறம், ஓசை, உணர்வு, ருசி முதலியவைகளே அவ்வக்கால பூஜையில் செய்யப்படும் அலங்காரம், வாத்தியம், தீபாராதனை நைவேத்யம் முதலியவைகளால் குறிக்கப்படுகின்றன என்பதுதான் ஆகம ரகசிய மாகும். இவ்வாறு ஆறு ஆதாரங்களையும் கடந்து சஹஸ்ராரம் என்ற ஆயிரம் இதழ் தாமரையிலே குண்டலினி சேர்வதுவே அர்த்த சாமம் அல்லது பள்ளியறை என்ற தரிசனம். அது இறைவன் தனது சித் சக்தியோடு இரண்டறக் கலந்து நிற்கும் சாதாக்கிய நிலையாகும். இந்நிலையில் சிவமும் சக்தியும் ஒன்றியிருத்தலால் மறுபடியும் அவர்கள் தொழிற்படுமாறு திரும்பவும் குண்டலினியை சஹஸ்ரார கமலத்திலிருந்து மூலாதாரத்துக்கு அழைத்து வரவேண்டிய அவசியம் ஏற்படு கின்றது. இதுவே கோயில்களில் காலையில் திருப்பள்ளி எழுச்சி என்ற வழிபாடு நடத்தப்படுகின்றது. இறைவனை எழுப்பி ஆன்மாக்களின் திரோதன மலத்தைப் போக்கியருள வேண்டும் என்ற விண்ணப்பமே இத் திருப்பள்ளி எழுச்சி என்ற பாசுரத்தில் அடிகளார் குறிப்பிடுவது. அதாவது ஆன்மாக்களை மூடியிருக்கும் மறைப்பு நீங்கி ஞானவொளி வெளிப்படுகின்ற முறைமையை இப்பாசுரம் விளக்கு கின்றது. இத்திருப்பள்ளி எழுச்சியின் திருப்பாட்டுகளுக்குள் புதைந்து கிடக்கும் அரும்பெரும் உண்மைகளை விரிக்கிற் பெருகும். ஆயினும் அவற்றின் கருத்தை பொழிப்புரை போன்றும் விளக்கவுரை போன்றும் எளிதில் உணரத்தக்க முறையில் ஈண்டு தரப் படுகின்றது.

திருப்பள்ளி எழுச்சி — 1

போற்றி என் வாழ்முத லாகிய பொருளே !
புலர்ந்தது; பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு

ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்

சேற்றிதழ் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே

ஏற்றுயர் கொடியுடையாய் எனை யுடையாய் !
எம்பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே ! (1)

முதலாவது பாட்டின் பொருள்

பொழிப்புரை:— அடியேனது ஞானவாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்குகின்ற பரம்பொருளே வணக்கம். பொழுது விடிந்தது. தேவரீரின் திருப்பாதங்களுக்கு ஒப்பான இரண்டு மலர்களைக்கொண்டு அத்திருவடிகளில் தூவி, உமது திருச்சன்னிதானத்தில் நின்று, எமக்கு அருள் சுரக்கும் முறையில் உமது திருமுகத்தில் எழுகின்ற அழகிய புன்முறுவலை பெரும் பேறுகக் கொண்டு தேவரீரின் திருப்பாதங்களை வணங்குவோம். அழகிய இதழ்களையுடைய தாமரை மலர்களைத் தன்னிடத்தே கொண்ட சேற்றால் நிரம்பிய குளிர்ச்சி பொருந்திய வயல்களால் சூழப்பட்ட திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கின்ற மங்கள மூர்த்தியே, உயர்ந்த இடபக்கொடியை உடையவனே, என்னை அநாதி காலமாக ஆளாக ஏற்றுக்கொண்டவனே, என் தலைவனே துயில் நீங்கி படுக்கையினின்றும் எழுவாயாக.

1-வது பாசுரம்

பந்துவராளி — ஆதிதாளம்

	;, ஸாரிஸா	ஸா ;	ஸ்ரிஸா	; தநீ	தபா	பாபம	தபதா
1.	போற்றியென்	வாழ்	மு...தல்	ஆ...	கிய	பொரு	ளே
	; தநீ தபம	கதபம	கரிஸா	; ஸரீ	கமா	பாமா	தபதா
2.	புலர்ந் தது	பூங்...	கழற்	இணை	துணை	மலர்	கொண்டு
	;, தாம தா	நீஸா,	ஸ் ரீ	ஸா நிஸா	ரிஸா	ஸாஸ்நி	தநி ஸாரிஸ
3.	ஏற்றிநின்	திரு	முக	த்து எமக்	கருள்	மல	ரும்.........
	நித நிஸா ரிஸா	ஸ்நிதா	நீஸா	; தநீ	தபா	பாபம	தபதா
4.	... எழில் நகை	கொண்டு	நின்	திரு	வடி	தொழு	கோ...ம்
	;, பாபபா	பாபா	தநி தபமா	; தஸ்நி	தபா	மதபம	கா கா
5.	சேற்றிதழ்	க ம	லங் கண்	மல	ருந்தண்	வ...யல்	...சூழ்
	; கதா பமா	கதபம	கரிஸா	; ஸரீ	கமா	பா ;	நிதபா
6.	திரு பெருந்	து...றை	யு...றை	சிவ	பெரு	மா...	னே...

7, 8 அடிகள் 3, 4 போல் பாடவும்

திருப்பள்ளி எழுச்சி — 2

அருணன் இந்திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்

கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாத்

திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே

அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே! (2)

இரண்டாவது பாட்டின் பொருள்

பொழிப்புரை:— இந்திரனை அதிபதியாக வுடைய கீழ்த்திசையிலே, சூரியனுடைய முன்னொளி (அருணன்) தோன்றிவிட்டது. அதாவது கிழக்கு வெளுத்து விட்டது. இரவின் இருள் அகன்று விட்டது. தேவரீரின் கண்களுக்கொப்பான தாமரைகளும் மலர அவற்றைச் சுற்றி வண்டினங்கள் ரீங்காரம் செய்யாநின்றன. அண்ணலே இவற்றை யெல்லாம் கருத்தில் கொள்வீராக. திருப்பெருந்துறையில் எழுந்தருளும் சிவபெருமானே! அருட்செல்வத்தை வழங்கவரும் இன்ப மலையே! அலைகளையுடைய கடல்போன்று ஆழ்ந்து அகன்றவனே! திருப்பள்ளி எழுந்தருள வேண்டும்.

சிதம்பரம் — கோவில் & தெப்பக்குளம்

Photo by courtesy: Sri M. Sp. சண்முகம், M. A., துணை ஆசிரியர், தமிழ்நாடு.

2-வது பாசுரம்

அஸாவேரி. ஸரிமபதஸ.

சாபு ஸநிஸபதமரிகாரிஸ

	;; ஸரி	மா ; ;	மா	பா பா ;	பாதா	பா ;
1.	அரு	ணன்	இந்	திரன்	தி	சை
	;; பம	பா ;	தாபா	மபமா, க	கா ரீ	ஸா ;
	அணு	கி	னன்	இ ருள்		போய்
	; , ரிரீ	பபமக	காரீ	ஸாஸரி நீ	ரீ ;	ஸா ;
2.	அகன்	ற...	து	உ த...	ய	நின்
	; , ரிரீ	மா ;	மா ;	பா ; ;	தநித	பா , ;
	மலர்	தி -	ரு -	மு - - -	க	த்தின்
3.	;; பம	பா ;	தா ;	ஸ்ா ; ;	ஸ்ா ;	ஸ்ா ;
(a)	கரு	ணை	யின்	சூ	ரி	யன்
	;; ஸ்ரி	கா ;	கா்ரீ	ஸ்ா ஸ்ாரிநி	ரீ ;	ஸ்ா ;
	எ	ழ	எ	ழ ந	ய	ன
	;; பம	பா ;	தா ;	ஸ்ா ; ;	ஸ்ரி	ஸ்ரிம்ரிகா ;
(b)	கரு	ணை	யின்	சூ	ரி -	யன்......
	;; ரீ	மமகா	காரீ	ஸ்ா ஸ்ாரிநி	ரீ :	ஸ்ா :
	- எ	ழ	எ	ழ ந	ய	ன -
	;; பத	ஸ்ா ;	ஸ்ாரீ	நீ ஸ்ா பா	பா த நி	தா பா
4.	கடி	ம	லர்	ம ல	ர	ம ......
	;; ரிம	பா ;	தாபா	ம ப மா ரீ	கா	ரீ ஸா ;
	றண்	ண	லங்	கண்	...	ணு .

5, 6, 7, 8 அடிகள் 1; 2, 3, 4 போல பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 3

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின இயம்பின சங்கம்

ஓவின தாரகை யொளி யொளியுதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்

தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருபெருந் துறையுறை சிவபெருமானே

யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (3)

3-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை:— (விடிவதை யுணர்த்தும்) அழகிய குயில்கள் கூவி விட்டன. கோழிகள் கூவின, மற்றுள்ள பறவைகளும் ஆரவாரம் செய்கின்றன, அடியார்கள் ஊதும் சங்கு நாதமும் கேட்கின்றது. விண்மீன்கள் தம் ஒளியிழந்து மறைந்து விட்டன. உதயத்தின் வெளிச்சம் எங்கும் பரவிவிட்டது. இறைவரே, வீரக்கழல் பொருந்திய உமது அழகிய திருவடி யிரண்டையும் காட்டியருளுவீராக, திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானே! யாரும் அறிய வொண்ணாத சிறப்புடையவனே! ஆயினும் உமது கருணையால் எம்போன்ற அடியார்களுக்கு எளிவந்தருள்பவனே! எங்கள் தலைவனே! துயில் நீங்கி அருள்வீராக.

3-வது பாசுரம்

ஆபோகி — ஆதி

ஸரிகமதஸ — ஸதமகரிஸ

‖ ; , தா த தா தாஸ்த தாதா | ; தஸ்ா தமா | மகரிக மா ; ‖
1. ‖ கூவின பூ... ங்குயில் | கூ வின | கோ... ழி ‖

‖ ; தஸ்ா தமா ரீகா , ரிஸா | ; ரிகா மதா | தாஸ்த தாமா ‖
2. ‖ குரு குகள் இயம் பின | இயம் பின | சங் ... கம் ‖

‖ ; , தா ம தா ஸா ; ஸா ஸா | ; ஸரீ கரீ | ஸாஸா ஸா ஸாகரி ‖
(a) ‖ ஓ வின தா ர கை | ஒளி ஒளி | உ த ய த்து... ‖

‖ ரீஸ தாமதா ஸா ; ரீரீ | ; ரிகா மரீ | ரீகா கரிஸா ‖
(b) ‖ ... ஓ வின தா ரகை | ஒளி ஒளி | உ தய த்து ‖

‖ ; ததா ரிஸ்ா தாமா தாஸா | ; தஸா தமா | மககரி ரிகமா ‖
4. ‖ ஒரு ப்படு கின்... ற து | விருப் பொடு | நம... க்கு ‖

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 4

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்

துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே

என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (4)

4-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை:— திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! உம்மை வழிபடுவதற்காக உமது சன்னிதி அடைந்தவருள் ஒரு சிலர் இனிய இசையைப் பொழியும் வீணையை உடையவராய் ஒரு பக்கம் நிற்கின்றனர், யாழ் வாசிப்போர் மற்றொரு பக்கம் நிற்கின்றனர், ரிக் முதலிய வேதங்களையும் மந்திரங்களையும் ஒலித்துக்கொண்டு சிலர் ஒரு பக்கம் நிற்கின்றனர், துதிப்பாடல்களைப் பாடிக்கொண்டு ஒரு சிலர் மற்றொரு பக்கம் நிற்கின்றனர், நெருக்கமாகத்தொடுக்கப்பெற்ற மலர் மாலைகளைக் கையில் ஏந்தினவர்களாய் சிலர் ஒரு பக்கம் நிற்கின்றனர், ஒரு பக்கத்தில் உம்மைத் தொழுகின்றவர்களும், இன்னொரு பக்கம் தம் குறைகளை நினைந்தோ அல்லது உமது அருளை வியந்தோ கண்களில் நீர்மல்கி அழுபவராய் ஒரு சிலர் நிற்கின்றார்கள், இன்னொரு பக்கத்தில் சிவானந்த மேலீட்டால் துவளும் இயல்புடையராய்ச் சிலர் நிற்கின்றனர். மற்றும் ஒரு பக்கம், தம் கரங்களை தலை மீது கூப்பி அஞ்சலி செய்தபடியே தம்மை மறந்து நிற்பவர் ஒரு சிலர். இவ்வாறு இறையன்பில் ஈடுபட்ட பல அடியார்களும் அவரவர்களின் ஆன்மபக்குவத்துக்கேற்ப பலதிறப்பட்ட வழிபாட்டை நிகழ்த்துபவர்களாய் உமது திருச்சன்னிதானத்தில் வந்து குழுமியிருக்கின்றனர். சிவபெருமானே (தகுதியற்ற) என்னையும் ஆட்கொண்டு இனிய பேரருள் செய்த எனது தலைவனே! திருப்படுக்கை தவிர்த்து எழுவீராக!

4-வது பாசுரம்

ராகம் சாரங்கா — ஆதி

ஸரிஸபாமபதநிஸ — ஸநிதபமரிகமரிஸ

	‖ ; ,	ஸா ரி ஸா	பா :	பா பா	| ;	மபா	தபா	| பா பா		பமமா	‖
1.	‖	இன்னிசை	வீ.	ணையர்	|	யா	ழினர்	| ஒரு		பால்	‖
	‖ ,	தநீ ஸ்ா ஸ்நி	தநிதா	பாபம	| ;	பமா	தபா	| பமரீ		கமரீ	‖
2.	‖	இருக் கொடு	தோ...	த்திரம்	|	இயம்	பினர்	| ஒ ரு		பால்.	‖
	‖	ஸா மபா தபா	தாநீ	ஸ்ா ஸ்ா	| ;	நிஸ்ா	ரிஸ்ா	| ஸ்ரிநிஸ		தநிஸா	‖
3.	‖	துன் னிய	பிணை	மலர்	|	கை	யினர்	| ஒ ரு		பால்	‖
	‖ ; ,	தநிஸ்ஸா	ஸ்தநிதா	பமா	|	மபா;	தபா	| மதபகரீ		கம	‖
4.	‖ ...	தொழுகையர்	அ ழு	கையர்	|	துவள்	கையர்	| ஒ ரு		பால்.	‖

‖ ரிஸ,

‖ ...

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 5

பூதங்கள் தோறுநின் ருயெனின் அல்லாற்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்

கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரை

சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்ன
சிந்தனைக்கும் அறியாய் எங்கள் முன்வந்து

ஏதங்கள் அறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (5)

5-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை:— மெய் அறிவு கைவரப்பெற்ற புலவர்கள், தேவரீரை ஐந்து பூதங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றீர் என்றும், போக்கும் வரவும் இல்லாதவன் என்றும் கூறிக்கொண்டு நல்லிசைப் பாக்கள் பாடுதலும், ஆனந்தமே லீட்டால் ஆடுதலும் செய்வது தவிற, உம்மைத் தாம் நேராகக் கண்டவர்களை நாங்கள் கேட்டதில்லை. குளிர்ச்சி பொருந்திய வயல்கள் நிறைந்த திருப்பெருந்துறைக்கு அரசே! மனதினாலும் ஊகித்தறிய வொண்ணாத தத்துவப் பொருளே! அடியேங்கள் முன்வந்து தோன்றி எங்கள் குற்றங்களைக்களைந்து எங்களை ஆட்கொண்டு, அருள் சுரக்கும் எங்கள் பெருமானே! பள்ளியெழுந்தருளுவீராக.

குறிப்பு :- இறைவனது சொரூப இலக்ஷணத்தை அறிந்த ஜீவன் முக்தர்களும்கூட இறைவனது புகழைப் பாடியும் அந்த ஆனந்தத்தில் ஆடியுமே வழிபடுகின்றனராம். அவர்களும் தடஸ்தலக்ஷணத்திலேயே தம் முள்ளத்தைச் செலுத்துகிறார்கள்.

5-வது பாசுரம்

நீலாம்பாரி — ஜம்பை

	;	கா	ஸா ;	ஸா	ரிகமப	பபம	கமா
1.		பூ	தங்	கள்	தோ	றும்	
	;	கம	பா ;	பம	கா ;	ரிகமா	மக
		நின்	ருய்	யெ	நின்	அல்	லா
	,	ஸ கா	மாபா ;		பாதா	பாபமமா	
2.	;	ல் போ	க்கிலன்		வ ர வி	லன்	
	;	கம	தபபபமக		ரிகமா	மகா	ஸஸா
		எ	ன	நினை	பு ல	வோர்	...
	;	கா	ஸா ;	ஸா	ஸா ;	ஸ்ா	ஸ்ரிநீ
3.	;	கீ	தங்	கள்	பா	டு	தல்...
	;	ஸ்ா	ஸ்ா	ஸ்ா நீ	தநிஸ்ா	ஸ்நிபா	பம
		ஆ	டு	தல்	அல் ...	லால் ...	
	;	ரீ	கா மா	கா	ரிக்மா	மகா	ஸஸா
		ஆ	டு	தல்	அல்	லால்	...
	;	கா	மா	பாபா	பாதநி	தப	பமமா
4.		கே	ட்ட	றியோம்	உ ...	...	ஊ. .
	;	கம	தப	பபமக	ரிகமா	மகாஸஸா	
		கண்	டறி ...		வா	ரை	

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 6

பப்பற வீட்டிருந் துணருநின் அடியார்
பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்

மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணாளா

செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே

இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (6)

6-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை :— உமாதேவியாரின் மணவாளரே! மனத்தின் விரிவு ஒழிய பற்றற்ற நிலையில் நின்று மெய்யுணர்வு பெற்ற நின் அன்பர்கள், உன்பாலெய்து அவரவர்பாச நீக்கம் பெற்றார்கள். அவர்கள் இறை அனுபவம் கைவரப்பெற்றவராயினும், சாதாரண மனித இயற்கையில் மைக்கண் மடந்தையர் தம் காதலிரிடம் அன்பு கொண்டு வணங்குவதுபோல் உம்மை வணங்குகிறார்கள். செவ்விய இதழ்களையுடைய தாமரை மலர்கள் நிறம்பப்பெற்ற வயல்களால் சூழப்பட்ட திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! இப்பிறப்பை அறுத்துப் பெருவாழ்வு கொடுக்க வல்ல என் தலைவனே! பள்ளி எழுந்தருளாயே !

6-வது பாசுரம்

கௌரீ மனோஹரி — ரூபகம்

	‖ ;	ஸ்ா ஸ்ா	ஸ்ா ;	நீ	|	தா ரீ ஸ்நி	தா	பாமா	
1.	‖	பப்ப	ற	...	|	வீ ட்டி	ரு	ந்து	
	‖ ;	மாதப	மகரீ	ஸா	|	ரீ ;	கா ;	மா ;	‖
	‖	உண	ரு	நின்	|	ன	டி	யார் .	‖
	‖ ;	காமா	பம	காரீ	|	கரிஸநி	ஸா ;	ஸா ;	‖
2.	‖	பந்த	ஊ...	வந்	|	த ...	று	த்தார் .	‖
	‖ ;	ககரிஸ	ரிகமப	தநி	|	ஸ்ரி ஸ்ரிகரி	ஸநிதப	மபதா	
	‖	அவர்...	ப...	ல...	|	ரும் ...	...	...	
	‖ நீ	ஸ்ாநீ	ஸ்ா ;	ஸ்ா	|	ரீ ;	ரீ கா	கரிரீ	‖
(a)	‖	மைப்	புறு	கண்	|	ணி ...	...	யர்...	‖
	‖ ;	நீநீ	நீ ;	நீ	|	நீ தா	தா பா	தநீ ,	‖
	‖	மாணி	ட	த்து	|	இ	யல்	பின் .	‖
	‖ நீ	ஸ்ாநீ	ஸ்ா ;	ஸ்ா	|	ரீஸ்ா	ரிக மாபம	காரீ	‖
3.	‖	மைப்பு	று	கண்	|	ணி...	...	யர்	‖
	‖ ;	ரிமகரி	ஸ்ா ;	ஸ்நி	|	ஸநிதா	நீ ;	ஸா ;	‖
	‖	மா ணி	ட...	த்து	|	இ...	யல்	பின் .	‖
	‖ ;	தநி	ஸ்ா ; ;	ஸ்நி	|	தநிஸ்நி	தாபா	மா ;	
4.	‖	வண	ங்கு	...	|	கின்...	...	ரூர்	
	‖ ;	மா தப	மக	ரீஸா	|	ரீ ;	கா ;	மா ;	‖
	‖	அ ணங்	கின்	ம	|	ஞ ...	...	ளா .	‖

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 7

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்

இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்

மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்ன

எதுவெமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (7)

7-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை:— பரம்பொருள் என்பது பழத்தில் சுவைபோன்றது (பிறவி அறுத்தலால்) அமுதம்போன்றது, அது அறிவதற்கு முடியாதது, அறிவதற்கு எளிதானது, என்றெல்லாம் பல திறப்பட வாதித்து தேவர்கள் கூட அதனை அறியமாட்டார். அப்பரம் பொருளானது எங்களை ஆட்கொள்ளும் பொருட்டு இந்நில உலகத்தில் திருவுருத்தங்கி வந்தருளிய பான்மை எவ்வாறு இருக்கின்றது எனில் இதுவே வீடளிக்கும் பரமனின் திருவுருவம், இத்திருவுருவங் கொண்டவரே அப்பரம் பொருள் என்று நாங்கள் சொல்லும் படியாக இருக்கிறது. அவ்வாறு திருவுருவந்தாங்கி எழுந்தருளிய தேன்மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருவுத்தரகோசமங்கையில் உறைபவனே! திருப்பெருந்துறை அரசே! எங்களை ஏவல்கொள்ளும் முறை எதுவோ அதைக் கேட்டு அதன்படி நடப்போம். எமது தலைவனே! திருப்பள்ளி எழுக.

7-வது பாசுரம்

கௌளி பந்து — ஆதி

ஸரிமபநிஸ — ஸநிபதமகரிஸ

|| ; ஸரீ மபா நீஸ்நி கரிஸா | ; ஸ்நீ பபம | பாதம கரிஸா ||
1. || அது பழ சுவை யென | அமு தென | அறி தற்கு. ||

|| ; நிஸா ரிஸா ஸநிபா ரிஸரீ | ; ஸரீ பமா | பாதம கரிகரி ||
2. || அரிதென் எளி தென | . அம ரரு | மறி... யார். ||

||ஸா நிபா நி நீ ஸ்ாஸா ரீஸா | ; நிஸா ரிஸா | ஸநிபா நீ ஸா ||
3. || — இது அவன் திரு வுரு | இவ னவன் | எ - ன - வே ||

|| ; , பநிஸ்ஸா ஸ்ா, நி பா மா | மரிபம நி ப ஸ்நி | ஸ்நிபம பாதம கரி ||
4. || ... என்னையும் ஆ.ண்டு கொண்டு | இங்...கெ ழுந் | த ரு ளும்...... ||

|| ஸநி
|| ...

|| ; , பாபபா பாதம தபதா | ; , பா பதா | பாதம கரிகரி || ஸா
5. || ... மதுவளர் பொழில் திரு | ... உத் தர | கோ... ச ||

||ஸா நிஸாரிஸா ஸநிபா ரிஸரீ | ; ஸரீமபம | பாதம கரி கரி || ஸா
6. || மங்கையுள் ளாய் திருப் | பெருந்துறை | மன் ஞ ...... || -

7, 8, அடிகள் 3, 4 போல் பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 8

முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயு நின்னடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே! (8)

8-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை :— ஆதியாகிய முதல் நிலையும், தோற்றமாகிற இடைநிலையும், யாதும் ஒடுங்கும் முடிவான நிலையுமான மூன்றாகவும் ஆனவனே! மும்மூர்த்திகளும் உனது உண்மை சொருபத்தை அரிய இயலார். அப்படியாயின் வேறு யார்தான் உன்னை அறிதல் கூடும்? பந்தின் தன்மைபோல் மென்மை, உருட்சி, திரட்சி மூன்றும் பொருந்திய திருக்கரவிர லுடைய திருவருட் சக்தியாகிய உமையம்மையும், நீயும் அடியார்களுடைய பழைய குடிசைகள்தோறும் அன்னவர்களுக்கு அருள் புரிவதற்காக எழுந்தருளிப்போகும் பரந்த கருணையுடைய மேலானவனே! சிவந்த நெருப்புப்போல செம்மேனி உருவங் காட்டியும், நீ நித்ய வாசம் செய்யும் திருப்பெருந்துறைத் திருக்கோயிலையும் காட்டியும் நீ அடியாரை ஆட்கொள்ள அந்தணனாய் வருவதும் காட்டியும் எங்கள்பால் எழுந்தருளி எம்மையாட்கொண்ட நிறைந்த அமுதமே! பள்ளி எழுந்தருளவேண்டும்!

8-வது பாசுரம்

அம்ருதவர்ஷணி — ஆதி

ஸகமபநிஸ — ஸநிபமகஸ

	‖ ; , ஸாகமா பாகா, மபா	; மபாநிபா	பபமக மாகா ‖	
1.	‖ முந்திய முதல்னடு	இறுதியு	மா ... ணய் ‖	
	‖ ; , பாபமா கமகா, ஸஸா	; , காமபா	பநிகஸ் ஸநிநீ ‖	
2.	‖ மூவரு ம றி கிலர்	யாவர்மற்	ற றி வார்... ‖	
	‖ ; , நீ ப பம பநிகஸ ஸநிபா	; , ஸாஸஸா	ஸநிநீஸா ; ‖	
3.	‖ பந்தணை விரலியு	நீ யு நின்	ன டியா ‖	
	‖ கஸ			
	‖ ர்			
	‖ ; நி ஸா க ஸா ஸநிபா ; மா	; ப நீ ப ப ம	பம கா, நிபம ‖	
4(a)	‖ பழங் குடில் தொ...றும்	எழுந்த ரு	ளிய பரனே ‖	
	‖ ; நி ஸா கஸா ஸநிபா; மா	பநி ஸகஸநி பநி	ஸநிபமக நிபக ‖	கஸ
(b)	‖ பழங் குடில் தொ...றும்	எ ழுந் தரு	ளி ய பர ‖	னே

5, 6, 7, 8 அடிகள் 1, 2, 3, 4 போல் பாடவும்

திருப்பள்ளி எழுச்சி — 9

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டார்
விழுப்பொருளே உன தொழுப்படியோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமுதே கரும்பே விரும்படியார்
எண்ணகத் தாய் உலகுக்குயி ராஞய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே! (9)

9-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை :— வானுலகத்தே உறையும் தேவர்களும் அடைதற்கரிதான மேலான பரம்பொருளே! உனக்கே யாட் செய்யும் அடிமையான எங்களை இம்மண்ணுலகத்திலேயே பேரின்பப் பெருவாழ்வு பெற்று வாழச்செய்ய இங்கே எழுந்தருளிப்போந்தத் திருப்பெருந்துறை சிவனே! வாழையடி வாழையாய் தொண்டாற்றும் வாய்ப்புப் பெற்று எங்களுடைய கண்ணிலும், அகத்திலும் நின்று மகிழ்ச்சி தருகின்ற தேன்போல் இனியவனே! அண்டினவருக்குப் பிறவித்துன்பம் நீக்கவல்ல திருப்பாற் கடல் அமுதம் போன்றவனே! கரும்புபோன்று தித்திப்பவனே! உன்னை மெய்யன்போடு விரும்புகின்ற அடியார்களின் உள்ளத்தில் உள்ளானே! எல்லா உயிர்களுக்கும் உயிரானவனே! எம்பெருமானே! பள்ளி எழுந்தருளுவீராக!

9-வது பாசுரம்

காபி—ஆதி

ஸரிமபநிஸ — ஸநிபமகரிஸ

	‖ ; ,	ஸ்ாஸ்ஸ்ா	ஸ்ஸ்நிநி	பமபா	; பஸ்ா	நிபா	மகபம	காரீ ‖
1.	‖	விண்ணகத்	தே ...	வரும்	நண்	ணவு	மாட்...	டார் ‖
	‖ ;	ஸரீகரீ	ஸநிபா	நீஸா	; ரிமா	பஸநி	பா கா ;	ரீ ‖
2.	‖	விழுப்பொ	ருளே ...	உன	தொழுப்	படி	யோங்	கள் ‖
	‖ ; ,	ரீநிஸ்ா	ரீ ; ,	க்ரீ	;, காரி	கா	ஸ்ரிஸ்ரிகரி	ஸ்நிஸா ‖
3.	‖	மண்ணகத்	தே ...	வந்து	வாழச்	செய்	தா	னே ‖
	‖ ; ,	ரீநிஸ்ா	காஸகமப ,	க்ரீ	...	...	...	... ‖
(b)	‖	மண்ணகத்	தே ...	வந்து	...	...	...	... ‖
	‖ ; ,	பாரிஸா	ஸஸநிநீ	பம ,	பா பாநிஸ்	நிப	மகபம	காரீ ‖
4.	‖	வண்திருப்	பெருந் ...	துறை	யாய் வ...	ழி...	ய - டி	யோம் ‖
	‖ ; ,	பாபபா ;	நீபா ;		; கமா	கமா	மகபம	மகரிக ‖
5.	‖	கண்ணகத்தே	நின்று		களி	தரு	தே ...	னே ... ‖
	‖ ஸரிம					(2) ‖	மகபம	காரீ ‖
						‖	தே ...	னே ... ‖
	‖ ;	ஸரீ கரீ	ஸா ,	பநீஸா	; ரிமா	பஸநி	பா	ககாரீ , ‖
6.	‖	கட லமு	தே ...	கரும்பே	விரும்	பும்	...	அடியார் ‖

7, 8 அடிகள் 3, 4 போல் பாடவும்.

திருப்பள்ளி எழுச்சி — 10

புவனியிற் போய்ப்பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறையாய் திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் னலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே! (10)

10-வது பாட்டின் பொருள்

பொழிப்புரை :— இந்நில உலகமே சிவபெருமான் தன் கருணையினால் ஆன்மகோடிகளை ஆட்கொள்ளும் வாய்ப்புப் பெற்றது என்பதைக்கண்டு, நாமும் புவியில் பிறந்து அவ்வாறு சிவபெருமானால் ஆட்கொள்ளும் வாய்ப்புப் பெறாமல் நமது வாழ்நாளை வீணாளாகப் போக்குகின்றோமே என்று திருமாலும், மலரிலுதித்த நான்முகனுங்கூட ஏங்கி ஆசைப்படும்படி நீயும் உன்னின்று மலர்ந்த பொய்யாத உனது அருட் சக்தியாகிய உமாதேவியாரும் பூவுலகில் போந்தருளி எங்களை ஏவல்கொள்ள வல்லவனே! ஆரமுதே! பள்ளி எழுந்தருள்வாயே!

திருச்சிற்றம்பலம்.



திருவண்ணாமலை — கோவில் & தெப்பக்குளம்

Block by courtesy: 'THE

10-வது பாசுரம்

மத்யமாவதி — ஆதி

	‖ ;	நிஸா ரிஸா	ரீ ; ,	ரிரிஸ	| ரீ மா	பாமா	| மரி பம	ரீஸா	‖
1.	‖	புவ னியிற்	போய்	பிற	| வா ...	மையில்	| நாள்	நாம் -	‖
	‖ ; ,	ஸாரி ஸா	ஸா,	ரிஸ நி ப	| ரிமபநி	ஸ்நிபம	| மரிபம	ரீஸா	‖
2.	‖ ...	போக்குகின்	ரேும்	அ.வ மே	| இந் ...	த ......ப்	| பூ	மி ...	
	‖ ;	பஸா	ஸ்ஸா	நிஸ்ா நி பாபம	| ; பநீ	ஸ்ரிம	| ஸ்ரீஸ	ஸாஸா	‖
3.	‖	சிவ	னுய்ய	கொள் கின்ற	| ஆ	றென்று	| நோ......	க்கி	‖
	‖ ;	பரீ	ஸ்ஸா	நீஸ்ா, நிபா	| பா பா	நிஸ்ா நி	| பா, ம	ரீஸா	‖
4.	‖	திருப்	பெருந்	துறை யுறை	| யாய் தி	ரு	| மா	லாம்	‖
	‖ ;	ரிரீ	மமா	பா ; , நிபா	| ; மபா	நிபா	| பம நிபம	ரிரீ	‖
5.	‖	அவன்	விருப்	பெய் தவும்	| மல	ரவன்	| ஆ·சைப்	பட	‖
	‖	ரிஸ	ரிரீ மரீ	ரிமபநிபம ரிஸா	| ; ரிரீ மமா		| பா ; ;	பா	‖
6.	‖	வும்நின்	அலர்ந்த	மெய் ....க்	| கருணையும்		| நீ	யும்	‖

7, 8, அடிகள் 3, 4 போல் பாடவும்.

923:41725
N57

76918

*

HILAL PRESS
TIRUNELVELI

*

9A
12-2